# ஊஞ்சல்

## பட்டுக்கோட்டை பிரபாகர்




## ஊர் உறங்கும் வேளை



# ஊர் உறங்கும் வேளை



பட்டுக்கோட்டை பிரபாகர்




ராஜாராமன் தன் ஸ்கூட்டரை 'வனிதா ஒயின்ஸ்' வாசலில் நிறுத்திப் பூட்டினான்.

வாசலில் இருந்த டீக்கடையில் அரை பாக்கெட் சிகரெட் வாங்கிக் கொண்டான். கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தான். குளிர் அவனை நலம் விசாரித்தது.

அந்தக் ஹால் பெரிய சதுரமாக இருந்தது. நிறைய வட்ட மேஜைகள். கூரையிலிருந்து இறங்கி வந்து ஒவ்வொரு மேஜைக்கும் இரண்டடி உயரத்தில் நின்று குறைவான வெளிச்சம் சிந்தின விளக்குகள். நிறையப் பேர் உரக்கப் பேசி சிரித்துக் கொண்டிருந்தார்கள். பத்துக்கு பத்து பேர் கையிலும் பீர் பாட்டில் அல்லது மது நிரப்பப்பட்ட கண்ணாடிக் கோப்பை இருந்தது. பத்துக்கு எட்டுப் பேர் ஊதுகின்ற புகை ஒரு சதுர அங்குலப் பரப்பளவையும் விட்டு வைக்காமல் பரவியிருந்தது. அதற்கு நடுவில் சிப்பந்திகள் நடந்து வந்து வாடிக்கையாளர்களின் தேவைகளை கவனித்துக் கொண்டிருக்க...

ராஜாராமன் ஒரு தனிமையான மூலை நோக்கி நடந்தான். நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான். அருகில் ஒரு சுவர் முழுக்க ஒரு பெண் உடைப் பஞ்சத்தினால் அவதியுடன் உடல் வளைத்து நின்றாள்.



கண்களை மட்டும் 'மூடி'யிருந்தாள்.

ராஜாராமன் தன் பத்திரிகை அலுவலகத்தின் உதவி ஆசிரியர் கணபதி மேல் இருந்த கோபத்தை பலவீனமான தீக்குச்சி மேல் காட்ட, அது நெருப்பு பற்றிக் கொள்ளும் முன்பாக உடைந்து போனது. நான்காவது தீக்குச்சி துரோகம் செய்யாமல் ஒத்துழைக்க... தன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, யாரோ வந்து அதை அவனிடமிருந்து பிடுங்கி விடுவார்கள் என்பதுபோல அவசர அவசரமாகப் புகைத்தான்.

வந்து நின்ற சிப்பந்தியிடம், ''எனக்கு இரண்டு பீர் பாட்டில்கள் வேண்டும். குளிர்ச்சி குறையாமல் இருக்க வேண்டும். உடனே, மிக உடனே வேண்டும்'' என்றான்.

ஒரு நிமிடத்திற்குள் அவன் கேட்டதும், கேட்காத உருளைக்கிழங்கு வறுவலும் மேஜைக்கு வந்தன. சிப்பந்தி ஒரு பாட்டில் உடைத்து கண்ணாடிக் கோப்பையில் ஊற்ற முற்பட்ட போது ராஜாராமன் தடுத்தான்.

பாட்டிலோடு வாங்கிக் கொண்டான். உதட்டில் அதன் வாயை வைத்தான். மெதுவாக நிமிர்த்தினான். கடக்... கடக்... கடக்... கடக்... பாட்டில் நேர் கோட்டிலிருந்து செங்குத்தாக உயர்ந்து கொண்டேயிருக்க... கடைசித் துளி வரைக்கும் உதட்டை விட்டு பாட்டிலை எடுக்காமல் முழுக்க குடித்து முடித்துவிட்டு வைத்தவனை சிப்பந்தி சற்றே வியப்போடு பார்த்தான்.

''என்ன பார்க்கிறாய்? இன்னொரு

பாட்டிலையும் இதே வேகத்தில் குடித்துக் காட்டட்டுமா?'' என்றான்.

''வேண்டாம் சார். நிதானமாக அனுபவித்துப் பருகலாமே? ஏன் இப்படி அவசரப்பட வேண்டும்? இன்னும் மூன்று மணி நேரம் கழித்துத்தான் கடையை சாத்துவோம்.''

''அதற்கில்லை. எனக்கு அவசரமாக போதை வேண்டும். அதற்காகத்தான் அவசரமாகக் குடித்தேன். ஏன் அவசரமாக போதை என்று கேள். எனக்கு இன்று அலுவலகத்தில் ஏற்பட்ட அவமானத்தை நான் மறக்க வேண்டும். என்ன அவமானம் என்று கேள்.''

''மன்னிக்க வேண்டும் சார். நான் மற்றவர்களையும் கவனிக்க வேண்டும். உங்களோடு அப்புறம் வந்து பேசுகிறேனே...''

சிப்பந்தி சென்றதும், ராஜாராமன் மற்றொரு பாட்டிலைக் கையில் எடுத்தான். அலுவலகத்தில் நடந்த சம்பவம் மனதிற்குப் பிடிக்கவில்லை என்றாலும் பிடிவாதமாக அசை போட்டது.

ராஜாராமனுக்கு 'ரோஜா' என்கிற அந்த வார இதழில் வேலை. நிருபர் வேலை மாதச் சம்பளம் அடிப்படையில் கிடையாது அவன் கொண்டு வருகிற செய்தி பிரசுரமானால் அதற்கு சன்மானப் தரப்படும். அந்தச் செய்தி சேகரிக் செலவழித்த நியாயமான செலவுக தரப்படும்.

சில சமயம் இவனாக ஊர் முழுக்க அலைந்து, திரிந்து செய்திகள் எடுத்துக் கொண்டு செல்வான். சில சமயம் இவனிடம், 'இந்த நபரைப் பேட்டி கண்டு வா. அந்த நிகழ்ச்சிக்குச் சென்று வந்து தொகுத்து எழுதித் தா' என்று வேலைகள் கொடுப்பார்கள்.

சன்மானமாக கிடைக்கிற தொகையை மட்டும் கணக்கிட்டால் குடும்பம் நடத்தவே முடியாது. 'ரோஜா' இதழின் நிருபர் என்கிற அந்தஸ்திற்காக பல சலுகைககள் அவனுக்குக் கிடைக்கும். எல்லாத் துறைகளிலும் உள்ள பெரிய மனிதர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். எங்கே சென்றாலும் தனி நாற்காலி மற்றும் உபசரிப்பு மரியாதைகள் கிடைக்கும். பெரிய பெரிய ஓட்டல்களில் நட்சத்திர விருந்து கிடைக்கும். இலவசமாக குடும்பத்துடன் சினிமா பார்க்க டிக்கெட்டுகள் கிடைக்கும். சிறப்பாக விமர்சனம் எழுதச் சொல்லி பொருளாக, பணமாக அன்பளிப்புகள் கிடைக்கும். இன்னும் நிறைய சவுகரியங்கள்.

ராஜாராமன் ஒரே வருடத்தில் சூட்சமம் புரிந்து கொண்டான். சினிமா செய்திகளை சேகரித்து, சினிமா நட்சத்திரங்களைப் பேட்டி கண்டு, சினிமாப் படங்களை விமர்சித்து ஒரு சினிமா நிருபராக மட்டும் தனி கவனம் செலுத்தி வந்தால் முன்னேற ஏராளமான வாய்ப்புகள் உண்டு.

நிருபராகப் பணியாற்றியபடி சில

நட்சத்திரங்களுக்கு பொதுமக்கள் தொடர்பாளராகப் பணி புரியலாம். பிறகு திரைப்படங்களுக்கு பொதுமக்கள் தொடர்பாளராகலாம். பிறகு தயாரிப்பு நிர்வாகி என்ற அந்தஸ்து கிடைக்கும். கெட்டிக்காரத்தனமாக நடந்து கொண்டால் திடீரென்று சினிமா தயாரிப்பாளராக மாறலாம்.

ஆகவே ராஜாராமன் தன் லட்சியத்தை எல்லாம் மூட்டையாகக் கட்டி பரணில் போட்டான்.

அவன் பத்திரிகைத் துறையில் நுழைய முற்பட்டபோது அவனிடம் இருந்த லட்சியமே வேறு. தமது கட்டுரைகளால், பேட்டிகளால் சமுதாயத்தில் பெரிய மாற்றங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள் பத்திரிகையாளர்கள். ஆதாரத்துடன எழுதப்படும் ஊழல் தொடர்பான கட்டுரைகள் ஒரு பலம் வாய்ந்த கட்சியின் ஆட்சியையே கவிழ்க்கக் கூடும்.

ஆகவே தன் எழுத்துக்களால் சமுதாயத்தில் ஒரு பெரிய புரட்சியே நிகழ வேண்டும் என்கிற உன்னதமான லட்சியத்துடன் பேனாவை எடுத்து பாக்கெட்டில் செருகிக் கொண்டுதான் முயற்சியைத் தொடங்கினான்.

தமிழ்ப் பத்திரிகை அலுவலகங்கள் ஒன்று விடாமல் அவன் நுழைந்து பார்த்தான். இவனுடைய வேட்கைக்கும் அவர்களுடைய தேவைக்கும் தொடர்பே இல்லாமல் இருந்தது.



"சார், தமிழ்நாட்டிற்குள் ஊடுருவி உள்ள தீவிரவாத இயக்கங்களின் நிழலான நடவடிக்கைகளைத் துப்பறிந்து ஒரு மாதம் வரைக்கும் அலசி ஒரு தொடர் கட்டுரை எழுதுகிறேன். அதற்கான சில ஏற்பாடுகளும், காவல் துறையினரின் ஒத்துழைப்பும் மட்டும் பெற்றுத் தாருங்கள்" என்ற இவனை விநோதமாகப் பார்த்தார்கள்.

"வியாசர்பாடியில பிறந்து பத்தே நாள் ஆன குழந்தை ஒற்றை விரலால் ஓம் என்று எழுதிக் காட்டுகிறதாம். அந்தக் குழந்தையிடம் அருள்வாக்கு பெற பெண்கள் கூட்டம் அலைமோதுகிறதாம். போய் அதைப் பற்றி விசாரித்து வரமுடியுமா?" என்றார்கள்.

அல்லது "நடிகை மங்களாஸ்ரீ நாய் கடித்து தொப்புளைச் சுற்றி ஊசி போட்டுக் கொண்டாராம். போய் அந்த அனுபவம் எப்படி இருந்தது என்று பேட்டி எடுங்கள். முடிந்தால் ஊசி போடப்பட்ட இடத்தை ஒரு புகைப்படம் எடுத்து வாருங்கள். அட்டைப்படக் கட்டுரையாக வெளியிடலாம்" என்றார்கள்.

ராஜாராமன் யோசித்தான். வீட்டிலோ ஒரு வேலைக்குப் போகத் துப்பில்லை என்று சதா அர்ச்சனை செய்கிற அப்பா. வேறு நல்ல வேலை கிடைக்கிற மாதிரியும் இல்லை. நிர்வாண நகரத்தில் கோவணம் கட்டிக் கொண்டிருப்பது அபத்தம் என்றுபட்டது.

இறங்கி விட்டான். 'ரோஜா' சென்ற வார

இதழில் 'நடிகை தொலைக்காட்சி புகழ் மாவன்னாஸ்ரீக்கும் முதல் படத்தை வெள்ளிவிழா கொண்டாடச் செய்த திருச்சிக்கார இயக்குனருக்கும் ரகசியமான காதல். விளைவாக அம்மணி இப்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 'தடயத்தை' சுத்தம் செய்து கொண்டார்களாம்' என்று ஒரு செய்தி படித்திருப்பீர்களே...

அது நம் லட்சியகுமாரன் ராஜாராமனின் பேனா சிந்திய பொன் எழுத்துக்களே. ஆனால்... ராஜாராமனின் உள் மனதில் தன் எழுத்தால் சமூகத்திற்கு எந்தப் பெரிய உபயோகமும் இல்லையே என்கிற ஏக்கம் மட்டும் என்றைக்கும் உண்டு.

இப்படிப்பட்ட ராஜாராமன் இன்றைக்கு ரோஜா இதழின் அலுவலகத்தில் உதவி ஆசிரியர் கணபதியிடம் ஒரு தகவல் தொகுப்பைத் தரவந்த போது...

''நம் அலுவலகத்தில் புதிதாக ஒருவரைப் பார்த்தேன். யார் சார் அது?'' என்று ராஜாராமன் விசாரித்தான்.

''புதிதாக வேலைக்குச் சேர்த்திருக்கிறோம். அவரும் நிருபர்தான். ஆனால் வேறு ரகம்.''

''வேறு ரகம் என்றால்?''

''இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிசம் என்றால் தெரியுமா உனக்கு? பல துறைகளில் நடக்கிற ஊழல்களை, கொடுமைகளை துல்லியமாக விசாரித்து பரபரப்பான கட்டுரைகளை எழுதப் போகிறார் அவர்.''

''ஏன் சார், இதை நான் செய்ய மாட்டேனா?''

கணபதி வெற்றிலைக் காவியேறின தன் பற்கள் தெரியச் சிரித்து, ''ஜோக் அடிக்காதே ராஜாராமா. எந்த நடிகை முழுகாமல் இருக்கிறாள், எந்த நடிகர் நட்சத்திர ஓட்டலில் தண்ணியடித்துவிட்டு தகராறு செய்தான், எந்த நடிகை மூக்கு ஆபரேஷன் செய்து கொண்டாள் என்று விசாரித்து வரத்தான் நீ லாயக்கு. அதற்கு மேல் நீ ஆசைப்படாதே'' என்றதும்...

ராஜாராமனுக்கு சவுக்கடி பட்ட மாதிரி இருந்தது. கணபதி இதைத் தன் தனி அறையில் வைத்துச் சொல்லியிருந்தாலும் பரவாயில்லை. சுற்றிலும் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்த ஆண்கள், பெண்கள் அத்தனை பேருக்கும் முன்பாக அப்படிச் சொல்ல... எல்லோரும் பேசி வைத்துக் கொண்டது போலச் சிரித்துவிட...

ராஜாராமனின் அவமானம் இன்னும் அதிகமானது. எதிர்த்து ஒரு வார்த்தை பேச முடியவில்லை. ஆனால் உள்ளே அனல் கக்கும் ஆயிரம் வார்த்தைகள் உதடு வரைக்கும் எழும்பி வந்து துடித்துக் கொண்டிருந்தன.

எதிர்த்து ஏதாவது சொன்னால் நிச்சயமாக வேலை போய்விடும். இவன் செய்கிற வேலையைச் செய்ய இவனை விட்டால் யாராக நூறு பேர் இருக்கிறார்கள். ஆனால் இவன் வீட்டிற்கு பணம் சம்பாதித்து வர

இவனை விட்டால் வேறு யாருமில்லை என்பதால் குனிந்த தலையுடன் அங்கிருந்து விலகி...

ராஜாராமன் இரண்டாவது பீர் பாட்டிலையும் குடித்து விட்டு மற்றொரு சிகரெட் பிடித்தான். மனதில் ஆத்திரம் துடித்தது.

எத்தனை பெரிய அவமானம்? என்னால் முடியாதா? இதை மட்டும் செய் என்று என்னைத் திசை திருப்பி விட்டவர்களே இவர்கள்தானே? நான் கூலிக்காக எழுதுபவன் மட்டுமில்லை, திறமை மிக்கவன் என்பதை இவர்களுக்கு நிரூபிக்க வேண்டும். நீ இதற்குத்தான் லாயக்கு என்ற அதே வாய் 'நீ இவ்வளவு பெரிய ஆள் என்று நினைக்கவே இல்லை' என்று சொல்ல வேண்டும்.

அதற்கு என்ன செய்ய வேண்டும்?

ராஜாராமன் வளையம் வளையமாகப் புகை வெளியேற்றியபடி யோசித்தான்.

''ஹலோ'' என்று இவன் தோளில் யாரோ தட்ட... திரும்பினான்.

தாடி வைத்திருந்த அவன் புன்னகையுடன், ''தீப்பெட்டி கொடுங்கள்'' என்று கேட்டு வாங்கித் தன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு திருப்பித் தந்து ''நன்றி'' என்று சொல்லிவிட்டு அருகில் காலியாக இருந்த மேஜையில் நாற்காலி இழுத்துப் போட்டு அவன் அமர்ந்தான்.

கருகருவென்று இருந்த அவனுடைய தாடி ராஜாராமனை வசீகரித்தது. அவன் தீப்பெட்டி கேட்ட விதத்தில் கண்ணியமும், கம்பீரமும் இருந்தது. சவரம் செய்தால் முன்னணி கதாநாயகன் ஒருவரின் சாயல் வரும் என்று பட்டது.

கன்னத்தில் கையூன்றி அந்த தாடிக்காரனையே லேசான போதையுடன் ராஜாராமன் பார்த்துக் கொண்டிருந்தபோது...

அந்தச் சிப்பந்தி தாடிக்காரனிடம் வந்தான். சிரித்தான். தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு சிறிய வெள்ளை உறை எடுத்து அவனிடம் தந்தான். பதிலுக்கு தாடிக்காரன் பத்து ரூபாய் நோட்டு ஒன்றைத் தன் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் கொடுத்து விட்டு, மது கொண்டுவரச் சொன்னான்.

ராஜாராமனுக்கு இந்த நடவடிக்கையில் ஒரு சிறிய சுவாரசியம் ஏற்பட்டது.

இவன் யார்? வாடிக்கையாக இங்கே வருபவனா? அந்தச் சிப்பந்தி கொடுத்த உறை என்ன? கடிதமா? கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது? தாடிக்காரனுக்கு தபாலில் அனுப்பலாமே... எதற்காக சிப்பந்தியிடம் கொடுத்து இவன் இங்கே வரும்போது கொடுக்கச் சொல்ல வேண்டும்? அதற்கு பத்து ரூபாய் இவன் தருவதென்றால், உறை முக்கியம் வாய்ந்ததாகத் தானே இருக்க வேண்டும்?

ராஜாராமன் பலவாறாக யோசித்துக் கொண்டிருக்கும் போதே தாடிக்காரன் அந்த உறையின் ஓரத்தில் உள்ளேயிருந்து டக்கப்பட்ட காகிதம் எடுத்துப் பிரித்து

சன்னமான வெளிச்சத்தில் படிக்கத் தொடங்கினான்.

ராஜாராமனால் இங்கிருந்து அந்தக் கடித வரிகளைப் பார்க்கக் கூட முடியவில்லை.

தாடிக்காரன் படித்து முடித்தான். உடனே தன் கைக்கெடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். எழுந்து கொண்டான். உறையை அவனிடம் கொடுத்த சிப்பந்தியை அழைத்தான்.

''எனக்கு அவசரமாகப் போயாக வேண்டும். நான் சொன்ன மதுவைக் கொண்டுவர வேண்டாம்'' என்று நடந்தான்.

ராஜாராமனுக்கு ஒரு புது சுவாரசியம் இப்போது ஏற்பட்டு, இந்த தாடிக்காரன் யார், எங்கே போகிறான் என்பதை அறியும் உந்துதல் வரவே... இவனும் எழுந்து கொண்டான்.

தன் மேஜை மேல் வைக்கப்பட்ட பில்லிற்கான பணத்தை வைத்துவிட்டு ராஜாராமன் தன் ஸ்கூட்டர் சாவியோடு அவசரமாக வெளியே வந்த போது...

தாடிக்காரன் ஒரு ராஜ்தூத் மோட்டார் பைக்கில் அமர்ந்து இருந்தான். அதைக் கிளப்புவதற்கு முன்பாக அவன் ஒரு காரியம் செய்தான். அந்தக் கடிதத்தை உறையோடு எடுத்தான். இரண்டாக, நான்காக, எட்டாகக் கிழித்தான். சாலையின் ஓரமாக வீசிவிட்டு விர்ரென்று புறப்பட்டுச் சென்றான்.

புறப்பட்டுச் சென்ற மோட்டார் பைக்கைத் தொடர்வதா, அல்லது அவன்



கிழித்து வீசிய கடிதத் துண்டுகளைச் சேகரிப்பதா என்று ஒரு விநாடி தடுமாறிய ராஜாராமன் தெளிவுக்கு வந்து அந்தக் கிழிசல் துண்டுகளை ஒன்று விடாமல் சேகரித்தான்.

தன் ஸ்கூட்டரின் இருக்கை மேல் அந்தத் துண்டுகளை கிழிந்த ஓரத்தின் வளைவுகளை வைத்து பொருத்தத் தொடங்கினான். சில நிமிடங்களில் ராஜாராமன் எட்டுத் துண்டுகளையும் பொருத்தியதும்... இப்போது அவனால் அந்தக் கடிதத்தைத் தெளிவாகப் படிக்க முடிந்தது.

*'அன்பான அலெக்ஸ்,*

*உனக்காக நானும் ராவும் ஓட்டல் கலிங்காவில் அறை எண் 109ல் இரவு எட்டு மணிக்குக் காத்திருப்போம். வந்துவிடு. ஒரு புதிய திட்டம் பற்றி விரிவாகப் பேச வேண்டும். 'பரணி சினிமா கம்பெனி' என்ற பெயரில் அறை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தப்பித் தவறி வரவேற்புப் பகுதியில் என் பெயரைச் சொல்லி விசாரித்து விடாதே. உன் பெயரையும் சொல்ல வேண்டாம். மற்றவை நேரில்.*

*-கே.'*

-என்று இருந்தது.

ராஜாராமன் மணி பார்த்தான். 7.50 ஆகியிருந்தது. அதனால்தான் மது அருந்தக்கூட நேரமில்லாமல் அவன் புறப்பட்டு விட்டான்.

சொந்தப் பெயர்களை மறைத்து வேறு பெயரில் அறை பதிவு செய்வது என்பதிலேயே ஒரு திருட்டுத்தனம் தெரிகிறது.

இவர்கள் யார்? ஒருவன் தெரியும். தாடிக்காரன், பெயர் அலெக்ஸ். ராஜ்தூத் மோட்டார் பைக் வைத்திருக்கிறான். ராவ் யார்? கடிதம் எழுதிய 'கே' யார்? ஓட்டல் அறையில் எந்தப் புதிய திட்டத்தைப் பற்றி இவர்கள் பேசப் போகிறார்கள்?

ராஜாராமனை கேள்விகள் பிடிவாதமான ஈயைப் போல சுற்றிச் சுற்றி வந்தன. புது ரத்தம் உடம்பில் பாய்ந்தது போல் உணர்ந்தான்.

இதை விடக்கூடாது. இந்த விவகாரத்தை ஆராய்ந்தாக வேண்டும் என்று தீர்மானித்தான். ஸ்கூட்டரில் அமர்ந்து புறப்பட்டான் ராஜாராமன்.



கிரண் ஓட்டல் கலிங்காவின் 10 என் அறையில் வசதியான படுக்கையில் சாய்ந்து படுத்தப தொலைக்காட்சி பெட்டியில் ஒலிம்பிக் விளையாட்டு போட்டியின் நிகழ்ச்சிகளைப் பார்த்து கொண்டிருந்தான்.

அறை நட்சத்திர அந்தஸ்துட இருந்தது. ஜன்னல் வழியாக தூரத்த



கடலைப் பார்க்க முடிந்தது. இரண்டாவது மாடி என்பதால் சாலையில் வாகனங்களின் மண்டைகள் தெரிந்தன.

அறைக் கதவு சங்கேதமான முறையில் ஒரு சிறிய தட்டல், இரண்டு பெரிய தட்டல், மீண்டும் சிறிய தட்டல் என்கிற முறையில் தட்டப்பட்டது.

கிரண் எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

''மாலை வணக்கம்'' என்று சொல்லி உள்ளே வந்தான் ராவ். ''இன்னும் அலெக்ஸ் வரவில்லையா?'' என்று நாற்காலியில் தொப்பென்று அமர்ந்த ராவ், சிகப்பு பனியனும், ஜீன்ஸ் பேண்ட்டும் அணிந்திருந்தான். பனியனில் ஒற்றைக் கண் புருவத்துடன் பெரிதாக வரையப்பட்டிருந்தது.

''அலெக்சுக்கு மதுக்கடையில் கடிதம் கொடுத்துவிட்டு வந்தேன். கொடுத்தி ருப்பார்கள். வந்து விடுவான்.''

''கிரண், நாம் பார்த்து ஒரு மாதம் இருக்குமா?''

''இருக்கும்.''

''இந்த ஒரு மாதத்திற்குள் உன் தொப்பை சற்றுப் பெரியதாகியிருக்கிறது.''

''ஒரு மாதமாக எந்த வேலையும் இல்லாமல் சும்மா உட்கார்ந்து மதுவில் மிதந்து கொண்டிருந்தால் பெரியதாகாமல் என்ன செய்யும்?'' என்றான் கிரண்.

''மது மட்டும்தானா கிரண்?'' கண்ணடித்தான் ராவ்.

''பூ வாங்கினேன் என்று நான்

சொல்கிறேன். அதில் இதழ் இருந்ததா என்று நீ கேட்கிறாய். இதழ் இல்லாத பூ எது? அதுபோல..."

"புரிகிறது. பேசாமல் கல்யாணம் செய்து கொள்."

"நமக்கு ஒத்துவராது ராவ். தற்காலிக கல்யாணம்தான் சரி. வருடத்தில் எத்தனை மாதம் வெளியே, எத்தனை மாதம் ஜெயிலில் என்று தெரிவதில்லையே. நீ யாரையோ காதலித்துக் கொண்டிருந்தாயே, என்ன ஆயிற்று ராவ்?"

"ப.பலராமன் என்பவர் எழுதியிருக்கும் கவிதைதான் ஞாபகத்திற்கு வருகிறது கிரண். 'அடுத்த தட்டில் விழும் சில்லறைக் காசின் சத்தம் கேட்டு தன் தட்டில் துழாவும் குருட்டுப் பிச்சைக்காரனைப் போல, அவள் யாருக்காகவோ சிந்திய புன்னகையை தனக்கென்று எண்ணி ஏமாறும் மனது இந்தக் கவிதை மாதிரியாகி விட்டது என் காதல். அவள் வேறு ஒருவனை திருமணம் செய்து கொண்டு விட்டாள் கிரண்."

"விடு ராவ். என்னைப் பொறுத்தவரை மிகவும் அற்பமான தோல்வி எது என்று கேட்டால், அது காதல் தோல்வி என்பேன். அதுசரி, கவிதை எல்லாம் கூட படிக்கிறாய் நீ?"

"இல்லை கிரண். நீ அனுபவம் இல்லாததால் பேசுகிறாய். உனக்கு பல்வலி வரும்போது வலியிலேயே கொடுமை யானது பல்வலி என்பாய். காது வலி வரும்போது மகா மோசமானது காது வலிதான் என்பாய். காதலிக்க வேண்டும், அதில் தோற்க வேண்டும். பிறகுதான் அந்தத் தோல்வியின் பாதிப்பை உன்னால் உணர முடியும்."

"இதை உணர்வதற்காக என்னால் காதலிக்க முடியாது. நமக்குத் தேவையில்லாத பிரச்சினை இது. அதை விட்டு விடலாம்" என்று கிரண் சொன்னபோது...

அறைக் கதவு முன்போலவே சங்கேத முறையில் தட்டப்பட்டது.

"வந்துவிட்டான்" என்று சொல்லிக் கொண்டே சென்று கதவைத் திறந்தான் கிரண். அலெக்ஸ் அவன் கையைக் குலுக்கி விட்டு உள்ளே வந்து ராவின் கையைக் குலுக்கினான்.

"வழக்கமாக மாலை ஆறு மணிக்கெல்லாம் அந்த மதுக்கடையில் இருப்பவன் நான். இன்றைக்குப் பார்த்து ஏழரை மணிக்குத்தான் சென்றேன். கடிதம் பார்த்ததும் உடனே புறப்பட்டு விட்டேன். கொண்டுவரச் சொன்ன மதுவைக் கூட வேண்டாம் என்று சொல்லி விட்டேன்."

"அதனால் என்ன? இப்போது கொண்டுவரச் சொல்லி விட்டால் போயிற்று" என்ற கிரண், உள் தொலைபேசியில் மூன்று பேருக்குமான மது மற்றும் சிக்கன் வகைகள் சொல்லி வைத்தான்.

ராவ் தொலைக்காட்சியை அணைத்து

விட்டு வந்தான். அலெக்ஸ் பற்ற வைத்த ஒரே தீச்சுடரில் மூன்று பேரும் தங்கள் சிகரெட்டுகளைப் பற்ற வைத்துக் கொண்டனர்.

''ம்... சொல் கிரண். என்ன புதிய திட்டம்?''

''இரு... என்ன அவசரம்? போதையேற்றிக் கொண்டு பேசலாமே. இந்த முறை திட்டத்தின் மதிப்பு அரை கோடி! ஆளுக்கு கிட்டத்தட்ட இருபது லட்சம்'' என்றான் கிரண்.

ஓட்டல் கலிங்காவில் வாகனங்கள் நிறுத்தும் பகுதியில் ஸ்கூட்டரை நிறுத்தினான் ராஜாராமன். அந்த ஓட்டலுக்கு அவன் பலமுறை வந்திருக்கிறான். விருந்துகளும், திருமண வரவேற்பு நிகழ்ச்சிகளும் இங்கே நிறைய நடந்திருக்கின்றன.

இந்த ஓட்டலில் வரவேற்பு பகுதியில் பணிபுரியும் விஜயசித்ரா பகுதிநே தொழிலாக புகைப்படங்களுக்கு விளம்பரங்களுக்கு போஸ் கொடுப்பவள் அவளைப் பேட்டி கண்டு ரோஜா இதழில் வெளியிட்டிருக்கிறான். அதற்கா அவனுடன் ஐஸ்க்ரீம் சாப்பிட்டிருக்கிறாள்.

ஓட்டலின் உள்ளே நுழைந்ததுே ராஜாராமன் முதலில் விஜயசித்ரா பணியி இருக்கிறாளா என்று பார்த்தான்.

இருந்தாள். உச்சந்தலையில் கிரிக்கெ பந்தளவிற்குக் கொண்டை போட்டு சேலையை இடுப்பில் அபாயகரமா



இறக்கத்தில் கட்டியிருந்தாள்.

''ஹலோ விஜயசித்ரா. எப்படி இருக்கிறீர்கள்?''

இவன் குரலில் நிமிர்ந்த அவள் முகம் பிரகாசமானது. ''நீங்களா? உங்களை எதிர்பார்க்கவே இல்லை ராஜா. உங்கள் முன்னணி இதழில் என் புகைப்படம் வெளிவந்ததல்லவா? அதைப் பார்த்துவிட்டு இப்போது ஒரு மலையாளப் படத்தில் கதாநாயகியாக நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து உள்ளார்கள். கதை விவாதம் நடக்கிறது. இன்னும் இரண்டு மாதம் கழித்து படப்பிடிப்பு ஆரம்பம். இந்த திடீர் திருப்புமுனைக்கும், வரப்போகிற புகழுக்கும் நீங்கள்தான் காரணம் ராஜா. நன்றி ராஜா'' என்றாள் குழைந்து.

''ஏற்கனவே பலமுறை நன்றி சொல்லி விட்டீர்கள் விஜயசித்ரா.''

''பரவாயில்லை. உங்களைச் சந்திக்கும் போதெல்லாம் நான் நன்றி சொல்லியாக வேண்டும். வருகிறீர்களா, உணவுப் பகுதி போய் ஏதாவது சாப்பிடலாம்...''

சம்மதித்து தலையசைத்தான் ராஜாராமன்.

இருவரும் அங்கு வந்து அருகருகில் அமர்ந்தபோது அவள் போட்டிருந்த சென்ட் மணம் அவன் மூக்கை நெருடி மனதையும் நெருடியது.

''காபி மட்டும் போதும்'' என்ற ராஜாராமன், ''விஜயசித்ரா... எனக்கு ஒரு உதவி வேண்டும்'' என்றான்.

''உத்தரவாகவே 'இதைச் செய்' என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது ராஜா...''

''உங்கள் ஓட்டலில் அறை எண் 109-ல் இப்போது மூன்று பேர் சந்தித்து ஏதோ ஒரு திட்டம் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள்.'

''சரி...''

''அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று நான் தெரிந்து கொள்ள வேண்டும். இதுவும் ஒரு வகையான பத்திரிகைப் பணிதான்.''

''அதுசரி, இதற்கு நான் என்ன செய்ய முடியும்?''

''முடியும். உங்கள் ஓட்டலில் அறைக்கு உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லும் சிப்பந்தியின் சீருடை ஒன்றை எனக்குத் தர வேண்டும். அவர்கள் அறைக்கு ஏதாவது எடுத்துச் செல்ல வேண்டியிருந்தால் அந்தப் பணியை என்னிடம் தர வேண்டும்.''

''கொஞ்சம் சிக்கலான வேலைதான். ஆனால் ராஜாவுக்கு நன்றி சொல்லும் விதமாக இந்த உதவியை நான் நிச்சயம் செய்கிறேன்'' என்றாள் விஜயசித்ரா.




அறைக் கதவு தட்டப்பட்டது.

''வரலாம்'' என்று குரல் கொடுத்தான் கிரண்.

கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே



வந்தான் ராஜாராமன். ஓட்டல் சிப்பந்தியின் சீருடையில் இருந்தான். சற்றுமுன் அவர்கள் சொன்ன மது மற்றும் உணவு வகைகளைக் கைகளில் வைத்திருந்தான்.

அவற்றை பவ்யமாக அவர்கள் முன்னால் வைத்தான். அவர்களை இரகசியமாக கண்களால் அளந்தான்.

''வேறு ஏதாவது வேண்டுமா சார்?'' என்றான்.

''வேண்டாம். நீ போகலாம்'' என்றான் கிரண்.

''நன்றி சார்'' என்றான். வாசல் கதவை நோக்கி நடந்தான். அந்தப் பெரிய அறை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. முதலில் கதவையொட்டி ஒரு சிறிய வரவேற்புப் பகுதி. அதற்குப் பிறகுதான் பெரிய அறை.

முதல் பகுதி இரண்டாவது பகுதி இரண்டுக்கும் நடுவில் கனமான துணித்திரை தொங்கியதால், கதவருகில் இருப்பவரை உள் அறையில் இருந்து பார்க்க முடியாதபடி அமைப்பு.

அந்த அமைப்பு ராஜாராமனுக்கு மிகவும் உதவியாக இருந்தது. கதவைச் சமீபித்த அவன் சற்றே ஓசையுடன் அதைத் திறந்து விட்டு வெளியேறாமல் உள்புறம் நின்றபடியே மறுபடி ஓசையுடன் சாத்தினான்.

உள்ளே இருப்பவர்கள் அவன் வெளியேறி விட்டதாகத்தான் நினைத்துக் கொள்வார்கள் இப்போது.

ராஜாராமன் அந்த வரவேற்புப் பகுதியில் இருந்த ஒரு அகலமான சோபாவிற்குப் பின்புறம் சென்று உட்கார்ந்து கொண்டான் மறைவாக.

உள்ளே அவர்கள் பேசுவதைக் கேட்கத் தயாராகத் தன் காதுகளைத் தீட்டிக் கொண்டான்.

''முதலில் கதவைத் தாளிட்டுவிடு அலெக்ஸ்'' என்றான் கிரண்.

அலெக்ஸ் முன்பகுதி வந்து தாளிட்டுவிட்டு ராஜாராமன் உட்கார்ந்திருப்பதைக் கவனிக்காமல் மறுபடி உள் அறைக்கு வந்தமர்ந்தான்.

மூன்று பேரும் மதுக் கிண்ணங்களை லேசாக இடித்துக் கொண்டு பருகத் தொடங்கினார்கள்.

''வழக்கமாக ஆறு மணிக்கே மதுக்கடைக்கு வந்துவிடும் நீ இன்றைக்கு ஏழரைக்கு வந்தது ஏன் அலெக்ஸ்?'' என்றான் கிரண்.

''அது... அது... ஒரு சின்ன சொந்த வேலை.''

''காதலிக்கிற வேலையா?'' என்றான் ராவ்.

''அட! இவனும் அதில் இறங்கி விட்டானா?'' என்றான் கிரண்.

''ஏன், என்ன தப்பு? கொலையே நம் அகராதிப்படி தப்பில்லையே.''

''அதற்கில்லை அலெக்ஸ். இந்த விவகாரத்தில் சமீபத்தில்தான் நான் அனுபவப்பட்டு வெறுத்துப்



போயிருக்கிறேன். பெண்களை நம்பாதே. அத்தனை பேரும் சந்தர்ப்பவாதிகள். சுயநலமிகள். கல்நெஞ்சக்காரர்கள்'' என்றான் ராவ்.

''நிறுத்திக்கிறியா உன் பிரசங்கத்தை? எல்லோரையும் ஒரே மாதிரி நினைத்தால் எப்படி? என் சிவரஞ்சனி அப்படி இல்லை'' என்றான் ஆத்திரமாக அலெக்ஸ்.

''சிவரஞ்சனியா? நீ மேரி இல்லை ஸ்டெல்லா என்று சொல்வாய் என்று நினைத்தேன்.''

''காதலுக்கு மதம் தடையில்லை கிரண்.''

''என்ன செய்கிறாள் உன் காதலி? கல்லூரியில் படிக்கிறாளா?''

''இல்லை. ஒரு வங்கியில் வேலை பார்க்கிறாள்.''

''ரொம்ப நல்லதாகப் போயிற்று.''

''எதற்கு?''

''இந்த முறை என் திட்டம் என்ன தெரியுமா? ஒரு வங்கியைத் துப்பாக்கி முனையில் கொள்ளையடிப்பதுதான். எந்த வங்கி, என்றைக்கு என்றெல்லாம் தீர்மானித்தாயிற்று. வங்கிக்குள் இருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை எப்படி முறியடிப்பது என்ற யோசனைக்கு உன் காதலி உதவியாக இருப்பாள் என்பதால்தான் நல்லதாகப் போயிற்று என்றேன்.''

''இதில் என் சிவரஞ்சனியை ஈடுபடுத்துவதை நான் விரும்பவில்லை.''

''உன்னை உத்தம சிகாமணி என்று

சொல்லி வைத்திருக்கிறாயா?''

''இல்லை. அதே சமயம் என் உண்மையான முகத்தை இன்னும் அவளுக்கு அறிமுகப்படுத்தவில்லை.''

''எத்தனை நாளாகப் பழக்கம்?''

''ஆறு மாதமாக.''

''எப்படித் தொடங்கியது இது?''

''ஒருமுறை ஓட்டல் திவ்யாவுக்கு ஆட்டோவில் சென்று இறங்கினேன். நூறு ரூபாய் நோட்டிற்கு ஆட்டோக்காரனிடம் சில்லறை இல்லை. பக்கத்தில் எந்தக் கடையிலும் சில்லறை கிடைக்கவில்லை. அருகில் இருந்த அந்த வங்கிக்கு சில்லறை மாற்றச் சென்றேன். அப்போதுதான் அவளை முதன்முறையாக சந்தித்தேன். அவள் தவறுதலாக பத்து ரூபாய் அதிகம் கொடுத்து விட்டாள். அதை மறுநாள் சென்று திருப்பிக் கொடுத்தபோது இரண்டாவது சந்திப்பு. பிறகு சந்திப்புகள் தொடர்ந்தன.''

''இப்போது அவனுடைய காதல் கதையைக் கேட்பதற்காகத்தான் நாம் இங்கே வேலை மெனக்கெட்டு கூடியிருக்கிறோமா?'' என்றான் எரிச்சலுடன் ராவ்.

''கோபித்துக் கொள்ளாதே'' என்று கிரண் சொன்னபோது தொலைபேசி ஒலித்தது. கிரண் எடுத்து, ''ஹலோ'' என்றான். ''சொல்லு. அப்படியா? ரொம்ப நல்லது. வேண்டாம். நீ இங்கே வரவேண்டாம். நீ அங்கேயே இரு. நாங்கள் அங்கே வருகிறோம்'' என்று சொல்லிவிட்டு



தொலைபேசியை வைத்தவன் எழுந்து கொண்டான்.

''என்ன?''

''இந்தத் திட்டம் தொடர்பாக ஒரு முக்கியமான ஆதாரமான தகவல்கள் சேகரிக்கச் சொல்லியிருந்தேன் ஒருவனிடம். தகவல் தயாராக இருக்கிறது. அவன் கடற்கரையில் இருக்கிறான். நாம் அங்கே போய் கடற்கரைக் காற்றை அனுபவித்தபடி மேற்கொண்டு பேசலாமே...''

''இந்த அறை?''

''நேற்றிரவு ஒரு முக்கியமான அனுபவத்திற்காக இந்த அறையை எடுத்தேன். காரியம் முடிந்து விட்டது. அறையைக் காலி செய்து கொண்டே போய் விடலாம்'' என்று கிரண் கண்ணடித்தான்.

சில நிமிடங்களில் அவர்கள் மூவரும் புறப்பட்டார்கள். அறையைச் சார்த்தி வெளிப்புறம் சாவி பொருத்திப் பூட்டினார்கள். சென்றார்கள்.

சோபாவின் மறைவின் மறைவில் இருந்து வெளியே வந்த ராஜாராமனுக்கு தெப்பலாக வியர்த்திருந்தது. மனது திடும் திடும் என்று அதிர்ந்தது.

அடப்பாவிகளா! இந்த மூன்று பேருமாகச் சேர்ந்து ஒரு வங்கியைக் கொள்ளையடிக்கப் போகிறார்களா? எந்த வங்கி? என்றைக்கு? முழுத் திட்டத்தையும் இங்கேயே பேசப் போகிறார்கள் என்று நினைத்தால், இப்படி பாதியில் புறப்பட்டுப் போய் விட்டார்களே...

விடக் கூடாது. இவர்களைத் தொடர்ந்து சென்று முழுத் திட்டத்தையும் தெரிந்து கொண்டாக வேண்டும்.

ராஜாராமன் அறைக் கதவைத் திறக்க முற்பட்டான். முடியவில்லை. பூட்டிக் கொண்டு போய் விட்டார்கள் என்பதை உணர்ந்தான்.

ராஜாராமன் அந்த உள்ளறையில் சென்று உள் தொலைபேசியை எடுத்தான். "கொஞ்சம் விஜயசித்ராவை பேசச் சொல்லுங்கள்" என்றான்.

அவள் தொடர்புக்கு வந்தாள்.

"நான்தான் ராஜாராமன் பேசுகிறேன். 109-ம் அறையிலிருந்து பேசுகிறேன். அவர்கள் அறையைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டார்கள். அறையை காலி செய்கிறார்கள். அங்கேதான் வருவார்கள்."

"வருவார்களா? வந்து... காலி செய்துவிட்டுப் புறப்பட்டுப் போய் விட்டார்கள் ராஜா..."

"எதில் சென்றர்கள்?"

"அதையெல்லாம் நான் கவனிக்கவில்லையே..."

"அய்யோ! அவர்களை நான் உடனே பின்தொடர்ந்து சென்றாக வேண்டும். சீக்கிரம் வந்து கதவைத் திறந்து விடுங்களேன்" என்றான்.

கதவு திறக்கப்பட்டு ராஜாராமன் வெளியே வந்து ஓட்டலின் வாசலுக்கு வந்து பார்த்தபோது மூன்று பேரையும் காணவில்லை.



கடற்கரை என்றார்கள். எந்தக் கடற்கரைக்குச் சென்று தேடுவது? அதிலும் இருட்டில் அவர்கள் எங்கே உட்கார்ந்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிப்பதும் சிரமம்.

இப்போது என்ன செய்வது?




சென்னை நகர காவல் துறையின் உதவி கமிஷனர் பாண்டியன் வாய் விட்டுச் சிரித்தார். அவர் மேஜைக்கு இந்தப் பக்கம் அமர்ந்திருந்த ராஜாராமனுக்கு எரிச்சலாக இருந்தது.

"என்ன சார் சிரிக்கிறீர்கள்?" என்றான்.

"நீங்கள் மர்மத் திரைப்படம் இரண்டாம் காட்சியில் பார்த்துவிட்டு படுத்து தூக்கத்தில் கண்ட கனவைத்தான் இப்போது என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்."

"சார், கனவா? நான் சொன்ன அத்தனையும் நிஜம்."

"நீங்கள் இரண்டு பாட்டில் பீர் குடித்ததாகச் சொன்னீர்கள் அல்லவா?"

"ஆமாம்."

"அதுவரைக்கும் உண்மை. அதற்குப் பிறகு சொல்வது முழுக்க முழுக்க அந்த போதையால் உங்களுக்கு தோன்றிய கற்பனை."

"என்ன சார், இப்படிப் பேசுகிறீர்கள்? நான் சொன்னதெல்லாம் உண்மை சார். அவர்கள் மூன்று பேர். ஒரு வங்கியை கொள்ளையடிக்கப் போகிறார்கள். அதில் ஒருவன் பெயர் அலெக்ஸ். அவன்தான் தாடிக்காரன்."

"சரி. கிழிந்த கடிதத்தை ஒன்று சேர்த்துப் படித்ததாக சொன்னீர்களே, அந்த ஒன்று சேர்க்கப்பட்ட கடிதத்தைக் காட்டுங்கள்."

"அதை ஒட்டவில்லை சார். சேர்த்து வைத்துப் பார்த்துப் படித்துவிட்டு தூக்கிப் போட்டு விட்டேன். ஒட்டலுக்குப் போகிற அவசரத்தில் இருந்ததால் அதை பத்திரப்படுத்த வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. நான் அந்த அறைக்கு ஒட்டல் சிப்பந்தி வேடத்தில் போனதற்கு சாட்சி உண்டு சார்."

"யார்?"

"அந்த ஒட்டலில் வேலை பார்க்கும் விஜயசித்ரா, வரவேற்பாளினி"

"அப்படியா? அவளை விசாரிக்கலாமா?"

"தாராளமாக. எனக்கு உதவியதைச் சொல்வாள்."

பாண்டியன் தொலைபேசியை அருகில் எடுத்து வைத்துக் கொண்டு ஒட்டல் கலிங்காவின் எண்ணைத் தொடர்பு கொண்டு, "ஹலோ, அங்கே மிஸ் விஜயசித்ரா இருக்கிறார்களா?" என்றார்.

"விஜயசித்ராதான் பேசுகிறேன்"

"நான் உதவி கமிஷனர் பாண்டியன் பேசுகிறேன். உங்கள் ஒட்டலில் அறை



எண்.109ல் யார் தங்கியிருக்கிறார்கள்?"

"இப்போது அறை காலியாக இருக்கிறது சார். 'பரணி சினிமா கம்பெனி' என்ற பெயரில் அறை எடுத்து ஒருவர் தங்கியிருந்தார். சற்றுமுன் அவரும் காலி செய்து விட்டார்."

"சரி. ராஜாராமன் என்கிற நிருபரை உங்கள் ஒட்டல் சிப்பந்தியின் சீருடை கொடுத்து அந்த அறைக்குள் செல்ல உதவி செய்தீர்களா நீங்கள்?"

எதிர்முனை தயங்கியது. அமைதியாய் இருந்தது.

"சொல்லுங்கள் மேடம்."

"அப்படி எனக்கு யாரையும் தெரியாது சார். நான் அப்படி எந்த உதவியும் செய்யவில்லை சார்."

சிரித்தபடி தொலைபேசியை வைத்தார் பாண்டியன்.

"என்னப்பா கதை விடுகிறாய் நீ? பரணி சினிமா கம்பெனி எவ்வளவு பிரபலமானது என்று தெரியுமா? பரணீதரன் ஆளுங்கட்சியில் உள்ள ஒரு முக்கிய புள்ளி. நீ உளறுவதை வைத்து அங்கே சென்று விசாரிக்கச் சொல்கிறாயா என்னை? கடிதம் எங்கே என்றால் இல்லை என்கிறாய். விஜயசித்ரா உதவினாள் என்கிறாய். அவள் இல்லை என்கிறாள். அந்த ஒட்டலில் விஜயசித்ரா என்று ஒருத்தி வேலை பார்ப்பது மட்டும்தான் உண்மை."

"அவள் இல்லை என்றா சொன்னாள்?"

"ஆமாம். இதோ பாருங்கள், எனக்கு

நிறைய வேலை இருக்கிறது. பத்திரிகை நிருபர் என்றதால்தான் இவ்வளவு தூரம் பொறுமையாகக் கேட்டேன். நீங்கள் சொன்னது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது; எதற்கும் ஒரு காகிதத்தில் எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்து விட்டுப் போங்கள். அவசியப்பட்டால் விசாரிக்கச் சொல்கிறேன்'' என்றவர் எழுந்து வெளியே சென்று விட்டார்.

நொந்து போன ராஜாராமன் எல்லாவற்றையும் எழுதிக் கொடுக்க நினைத்து ஒரு காகிதம் எடுத்துத் தொடங்கி... திடீரென்று எரிச்சலுற்று அந்தக் காகிதத்தைக் கோபமாக கசக்கி குப்பைக் கூடையில் வீசிவிட்டு வெளியே வந்தான்.

என்ன அதிகாரி இவன்! எத்தனை அக்கறையோடு நான் இதில் ஈடுபட்டு வந்து எச்சரிக்கையாக செய்தியைச் சொன்னால் இப்படி அலட்சியப்படுத்தி விட்டாரே...

பொதுத் தொலைபேசியில் இருந்து விஜயசித்ராவை அழைத்தான்.

''என்ன இப்படிக் காலைவாரி விட்டு விட்டீர்கள்?''

''என்ன சொல்கிறீர்கள்?''

''உதவி கமிஷனரிடம் நீங்கள் எனக்கு உதவவில்லை என்று விட்டீர்களே...''

''நட்புக்காக உதவப் போய் அது போலீஸ்வரை வந்து நிற்கும் என்று எனக்குத் தெரியுமா? என் ஓட்டல்



நிர்வாகத்திற்கு இது தெரிந்தால் என வேலை போய்விடும் ராஜா. மன்னித்து விடுங்கள். அதனால்தான் அப்படிச் சொன்னேன்.''

''பரவாயில்லை, விடுங்கள். என் நேரம் சரியாக இல்லை இன்றைக்கு.''

''அவர்கள் போலீசிடம் செல்ல வேண்டிய அளவிற்கு அப்படி என்ன பேசிக்கொண்டார்கள் ராஜா?''

''பெரிய கதை. நாளைக்குச் சொல்கிறேனே நேரில்.''

''சரி.''

தொலைபேசியை வைத்துவிட்டு மேற்கொண்டு இதில் என்ன செய்வது என்று யோசித்தான் ராஜாராமன்.

நிலவொளியின் தயவில் வைர நெக்லஸ் அணிந்திருந்த அலைகள் அதை ஊருக்குள் அனைவருக்கும் காட்ட கரை நோக்கி வந்து கொண்டிருந்தன.

''என்ன, திட்டம் பிடித்திருக்கிறதா?'' என்றான் கிரண்.

''திட்டம் அட்டகாசமாகத்தான் இருக்கிறது. எந்தக் குழப்பமும் இல்லாமல் இதைச் செய்து முடிக்க வேண்டும்'' என்றான் ராவ்.

''என்ன குழப்பம் வரும் என்று நீ எதிர்பார்க்கிறாய் ராவ்?''

''ஒரு வங்கியில்; அதுவும் பகல் நேரத்தில் புகுந்து கொள்ளையடிப்பது நமக்குப் புதிய அனுபவம் கிரண். மாட்டிக் கொண்டால் சில வருடங்கள் கிடைக்கும்.''

''ஏன் எடுத்ததும் மாட்டிக் கொண்டால்

என்று யோசிக்கிறாய்? நாம் மாறுவேடத்தில்
தான் உள்ளே நுழையப் போகிறோம். துப்பாக்
கியை நிமிர்த்தப் போகிறோம். உயிருக்குப்
பயந்து நமது பெட்டிகளில் பணத்தை அடுக்
கிக் கொடுக்கப் போகிறார்கள். நாம் வாட
கைக்கு எடுக்கிற காரில் அங்கு போகிறோம்.
நீயும் நானும் மட்டுமே போகிறோம். வேறு
ஒரு இடத்தில் நமது காருடன் அலெக்ஸ்
காத்திருக்கப் போகிறான். நாம் கொள்ளைய
டித்துவிட்டுப் புறப்பட்டதும் வங்கிக்காரர்
கள் எப்படியும் போலீசுக்கு தகவல் சொல்லு
வார்கள். நாம் ஏறிச் செல்லும் காரின்
எண்ணை கவனித்துச் சொல்வார்கள். நமது
காரை காவல்துறை தேடத் தொடங்கும். நாம்
அதை போக்குக் காட்டி ஒரு இடத்தில் விட்
டுவிட்டு அலெக்ஸ் இருக்கும் காருக்கு மாறு
கிறோம். மாறுவேடத்தைக் கலைக்கிறோம்.
தமிழக எல்லையைத் தாண்டுகிறோம்.
இதில் எங்கே குழப்பம் இருக்கிறது?''

''சரி. நீ தேர்ந்தெடுத்திருக்கும் வங்கியில்
நாம் போகிற திங்கள்கிழமை, அன்று நீ சொல்
கிறபடி அவ்வளவு பணம் இருக்குமா
கிரண்?'' என்றான் அலெக்ஸ்.

''இந்தத் திட்டத்தை ஒரே நாளில் நான்
உருவாக்கியிருப்பேன் என்று நினைக்கிறாய்
நீ? மூன்று மாதமாக திட்டமிட்டேன்
அலெக்ஸ். அதே வங்கியில் வேறு ஒரு
பெயரில் கணக்கு தொடங்கிக் கொண்
டேன். அடிக்கடி போக ஆரம்பித்தேன்
பணம் போட்டேன். எடுத்தேன். வங்கியின்
நடவடிக்கைகளை கவனித்தேன். அந்த வா



கிக்கு நான்காவது கட்டிடத்தில் ரம்யா நகை மாளிகை என்று ஒரு பெரிய கடை உள்ளது. அவர்கள் கடையில் எப்போதும் ரேஷன் கடை போல கூட்டம் மொய்க்கும். லட்ச லட்சமாக வியாபாரம். வாரத்திற்கு இரண்டு நாட்கள் திங்களும் வியாழனும் அவர்கள் கடையில் இருந்து வங்கிக்கு வந்து தங்கள் கணக்கில் பணம் கட்டுகிறார்கள். எத்தனை லட்சம் தெரியுமா? முப்பது லட்சம், முப்பத்தி இரண்டு லட்சம் இப்படி... சரியாக வங்கி நேரம் முடிய பத்து நிமிடம் இருக்கும் போது தான் அந்தக் கடையில் இருந்து நபர்கள் வந்து கட்டுகிறார்கள். அதனால்தான் நான் திங்கள் கிழமையை நம் திட்டத்திற்கு தேர்வு செய்தேன்.''

''வங்கி எத்தனை மணிக்கு தன் அலுவலை முடித்துக் கொள்கிறது?''

''மதியம் மூன்று முப்பதுக்கு முடிகிறது. ஆனால் வாடிக்கையாளர்களுக்கான நேரம் மதியம் பனிரெண்டரை மணிக்கெல்லாம் முடிந்து விடுகிறது. அதற்கப் பிறகு உள்ளே வங்கியின் ஊழியர்கள் மட்டும்தான் இருப்பார்கள்.''

''எத்தனை ஊழியர்கள் மொத்தம்?''

''பதினான்கு பேர்.''

''அவர்களில் பெண்கள் எத்தனை பேர்?''

''ஐந்து பேர். அந்த ஐந்து பெண்களில் இரண்டு பேர் கர்ப்பமாக இருக்கிறார்கள். ஒரு பெண் திருமணமாகாதவள்.''

''கிரண், நீ மிகமிகத் துல்லியமாக எல்லா விவரங்களையும் சேகரித்திருக்கிறாய் என்

பதை ஒப்புக் கொள்கிறோம்.''
கிரண் அவர்களிடம் சண்டல் வேண்
டுமா என்று கேட்டு வந்த சிறுவனை விரட்
டினான். காற்றின் எதிர்ப்பை மீறி தீ ஜ்வா
லையை விரல்கள் அமைத்த கூடாரத்திற்
குள் நிறுத்தி, சிகரெட் பற்ற வைத்துக்
கொண்டான்.

''இன்னும் கேள்விகள் இருக்கின்ற
னவா?''

''நிச்சயமாக'' என்றான் ராவ். ''வங்கிக்கு
காவல்காரன் என்று யாரும் இல்லையா?''

''இல்லை. பகலில இல்லை. இரவுக்கு
மட்டும் காவல்காரன் உண்டு.''

''வங்கியின் பாதுகாப்பு ஏற்பாடுக
என்ன?''

''வங்கியின் இரும்புப் பெட்டகத்திற்
ஏராளமான எலெக்ட்ரானிக் பாதுகாப்பு வச
கள் உள்ளன. ஆனால் நாம் அந்தப் பக்கமே
போகப் போவதில்லையே. வங்கியி
மேனேஜர் அறையிலும், வெளியில் கே
யர் தனிப்பகுதியிலும் இரண்டு சுவிட்
கள் இருக்கின்றன. அந்த சுவிட்ச்சுகள் அ
கள் காலடியில் இருக்கின்றன. அந்த சுவி
சுகளின் மேல் அவர்கள் லேசாக கால் வை
தால் போதும்.''

''என்ன ஆகும்?''

''வங்கிக் கட்டிடத்தின் வெளிப்புறத்த
பொருத்தப்பட்டுள்ள பெரிய அலாரம்
தமா ஒலிக்கத் தொடங்கும். ஊரை
கூட்டி விடும்.''

''அதை ஒலிக்காமல் செய்வதற்கு எ

வழி?''

''இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று உள்ளே இருக்கும் மின்சார முக்கிய சுவிட்சை அணைத்து விட்டால் போதும்.''

''உளறாதே. இந்த மாதிரி அலாரங்கள் சக்தி வாய்ந்த பேட்டரியால் இயங்குபவையாக அமைக்கப்பட்டிருக்கும்.''

''இல்லை, இல்லை. அந்த வங்கியைப் பொறுத்தவரை மின்சாரத்தில் இயங்கும் அலாரம்தான் பொருத்தப்பட்டிருக்கிறது. நான் பார்த்து விட்டேன்.''

''சரி, இன்னொரு வழி சொன்னாயே...''

''மானேஜரையும் சரி, கேஷியரையும் சரி. அந்த சுவிட்ச்சுகளை இயக்க அனுமதித்தால் தானே நாம்? அந்தக் கவலையே வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''இந்தத் திட்டத்தில் எனக்கு ஒன்றும் பெரிதாக வேலை இல்லையே?'' என்றான் அலெக்ஸ்.

''பணத்தைக் கொள்ளையடிப்பது மட்டும் வேலை இல்லை அலெக்ஸ். போலீஸ் கைக்குச் சிக்காமல் தப்பிச் சென்று அதை அனுபவிக்க வேண்டும். அதற்கு நீதான் உதவப் போகிறாய்.''

''சரி. திங்கள்கிழமை அந்த வங்கிக்கு நீயும், ராவும் எத்தனை மணிக்கு செல்லப் போகிறீர்கள்?''

''சரியாக ஒரு மணிக்கு.''

''நான் எங்கே நம் காருடன் காத்திருக்க வேண்டும்?''

''கிண்டியில் கத்திப்பாரா சந்திப்பு. நேரு

சிலை இருக்கிறதே. அதற்கு அருகில் மீனம்
பாக்கம் செல்கிற சாலையில் ஒரு ஓரமாக
காரை நிறுத்தி காத்திருக்க வேண்டும்."

"எத்தனை மணிக்கு?"

"அந்த வங்கியில் இருந்து அந்த இடத்
திற்கு வர இருபது நிமிடங்கள் ஆகும். வா
கிக்குள் ஒரு பதினைந்து நிமிட வேலை
என்று வைத்துக் கொள்ளலாம். எப்படியு
முக்கால் மணி நேரத்தில் நாங்கள் அந்
இடத்தில் இருப்போம்."

"அதாவது ஒன்றே முக்காலுக்கு."

"ஆமாம். ஆனால் நீ ஒன்றரை மணியி
இருந்தே காத்திரு."

"நம் காராக இருந்தாலும் போலியா
எண்கள் கொண்ட தகட்டைப் பொருத்தி
கொள்" என்றான் ராவ்.

"இது நம் தொழில் அடிப்படைப் பாட
இதுகூடத் தெரியாதா எனக்கு?" என்றா
அலெக்ஸ்.

மேலும் தொடர்ந்து அவர்கள் திட்டத்
நுணுக்கமான செயல்பாடுகளைப் பற்
பேசத் தொடங்கினார்கள்.




ராஜாராமன்
டிற்கு வந்த போ
வாசலி லே
அப்பா உட்கார்
ருந்தார். இ
ஸ்கூட்டரை நிறு
யதுமே சொன்ன

"எங்கேடா போனாய்? டைரக்டர் பாக்கிய
ராஜ் பக்கத்து வீட்டு தொலைபேசியில் உன்
னைத் தொடர்பு கொள்வதற்காக மூன்று
முறை மேட்டூரில் இருந்து எஸ்.டி.டி.யில்
முயன்றார். உன்னை வந்ததும் இந்த எண்
ணிற்கு எஸ்.டி.டி. தொலைபேசி மூலம்
பேசச் சொன்னார்." என்றார்.

அந்தச் சீட்டை வாங்கிக் கொண்டு
ஸ்கூட்டரில் இருந்து இறங்காமலேயே
திரும்பி ஒரு தொலைபேசி கடைக்கு வந்து
அந்த எண்ணைத் தொடர்பு கொண்டான்.

"ஹலோ, இயக்குனர் இருக்கிறாரா?"

"பாக்கியராஜ்தான் பேசுகிறேன்."

"சார், நான் ராஜாராமன் பேசுகிறேன். நீங்
கள் தொடர்பு கொண்டீர்களாமே...'

"ஆமாம் ராஜாராமன். எப்படி இருக்கிறீர்
கள்? நான் இங்கே மேட்டூரில் தங்கி இடை
விடாமல் ராசுக்குட்டி திரைப்படத்தின் படப்
பிடிப்பு நடத்தி வருகிறேன் என்பது தெரி
யுமா உங்களுக்கு?"

"தெரியுமே சார். ரோஜாவில் செய்திகூட
வெளியிட்டிருந்தேனே..."

"இந்தப் படத்தின் திரைக்கதையை
தொடராக ரோஜா இதழில் எழுத வேண்டும்
என்று உங்கள் ஆசிரியர் கேட்டுக் கொண்
டார். நான் யோசித்துச் சொல்வதாக சொல்லி
இருந்தேன். நாளைக்கும் நாளை மறுநாளும்
படப்பிடிப்பு ரத்தாகிறது. ஒரு சின்ன ஓய்வு
கிடைத்திருக்கிறது. அதனால் அந்தத்
தொடரை உங்கள் இதழில் எழுதலாம்
என்று நினைத்தேன். நான் வாயால் சொல்லி

விடுகிறேன். டேப்பில் பதிவு செய்து கொள்
ளுங்கள். எப்போது வரமுடியும் உங்களால்?
இன்றைக்கு இரவே புறப்பட்டு நாளைக்
காலையில் நீங்கள் இங்கே இருந்தால் நல்
லது.''

''சரி சார். வந்து விடுகிறேன்'' என்று
வைத்த ராஜாராமன் முகத்தில் ஒரு புதிய
உற்சாகம் பொங்கியது.

வங்கிக் கொள்ளை ஒன்று நடக்கப்
போவது அறிந்து உதவி கமிஷனரை நேரி
லேயே சந்தித்து விபரமாகச் சொல்லியும்
அவர் அதை அலட்சியப்படுத்தியது இதயத்
தில் சற்று முன்வரை வலித்துக் கொண்டி
ருந்தது. மேற்கொண்டு என்ன செய்வது
என்று யோசனை புரியாமல் தவிப்பு இருந்
தது.

இப்போது இந்த தொலைபேசி உரையா
டலுக்குப் பிறகு அந்தச் சிந்தனை எல்லாம்
காணாமல் போய் விட்டது.

இயக்குனர் பாக்கியராஜிடம் திரைக்கதை
தொடர் வாங்குவது என்பது ரோஜா அலுவ
லகத்தைப் பொறுத்தவரை ஒரு சின்ன வெற்
றிதான். ஏற்கனவே உதவி ஆசிரியர் கண
பதி இது தொடர்பாக நேரிலேயே சந்தித்து
தோல்வி முகம் கொண்டு திரும்பியிருக்கி
றார்.

ராஜாராமன் உடனே ரோஜா ஆசிரிய
ருக்கு போன் செய்தான்.

''சார், நான் ராஜாராமன் பேசுகிறேன். ந
இதழில் திரைக்கதை தொடர் எழுதுவ
தொடர்பாக நான் இயக்குனர் பாக்கியராஜை

தொடர்பு கொண்டு பேசினேன் சார். எனக்கு
அவர் நல்ல பழக்கம் சார். நீங்கள் ஏற்கனவே
கேட்டிருக்கிறீர்கள். நானும் வற்புறுத்தவே
உடனே சரி என்று விட்டார். இன்றிரவே
புறப்பட்டு என்னை மேட்டூர் வரச் சொல்லி
யிருக்கிறார். நான் போகட்டுமா சார்?''

''என்னய்யா கேள்வி இது? உடனே புறப்
படு ராஜாராமா''

''இந்த நேரத்திற்கு ரயில் எதுவும் இல்
லையே சார்..''

''வாடகைக் கார் அமர்த்திக் கொண்டு போ
ராஜாராமா. எல்லாச் செலவையும் நிர்வாகத்
திடம் வாங்கித் தருகிறேன்''

''நன்றி சார்.''

ராஜாராமன் வீட்டிற்கு வந்து சாப்பிட்டு
விட்டு பெட்டியில் உடைகளை எடுத்து
வைத்துக் கொண்டு, சொல்லி விட்டுப் புறப்
பட்டான்.

வாடகைக் கார் நிறுவனத்திற்கு வந்து கார்
அமர்த்திக் கொண்டு புறப்பட்டான். ராஜாரா
மனுக்கு திரைப்படத் துறையில் இயக்குன
ராக வேண்டும் என்று லேசான ஒரு ஆசை
உண்டு. இந்த முறை சரியான சந்தர்ப்பம்
கிடைத்திருக்கிறது. பாக்கியராஜிடம் உதவி
இயக்குனராகச் சேர வாய்ப்பிருக்கிறதா
என்று கேட்டுவிட வேண்டும்.

பக்குவமாகக் கேட்க வேண்டும். எப்படி
வார்த்தைகளை அமைத்துக் கேட்கலாம்
என்று யோசிக்கத் தொடங்கினான் ராஜாரா
மன்.

இந்த புதிய சிந்தனையில் வங்கிக்

கொள்ளை சமாச்சாரம் அவன் மனதை விட்டு வெகுத்தூரம் சென்றிருந்தது.



திங்கள் கிழமை வானம் கலங்கிப் போய் காலையில் இருந்தே ஒரு மழைக்குத் தயாராக இருந்தது. மக்கள் வீட்டிற்குள்ளேயே துணி காயப் போட்டிருந்தார்கள். மாமிகள் வடாம் பிழியும் திட்டத்தை ஒரு நாள் ஒத்தி வைத்தார்கள்.

மதியம் சரியாக ஒரு மணிக்கு அந்த வங்கிக்கு முன்னால் காரை நிறுத்தினான் ராவ்.

ராவ் சூட், கோட் அணிந்து ஒரு கோடீஸ்வரன் போல இருந்தான். ஆறு விரல்களில் மோதிரங்கள். கையில் அழகான வாக்கிங் குச்சி.

கிரண் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் போல வெள்ளை நிற அங்கி அணிந்து சிகப்புப் பட்டை இடுப்பில் கட்டியிருந்தான். முகத்தில் தாடி வைத்திருந்தான். ஒரு கையில் பைபிள் புத்தகமும், மறு கையில் ஒரு பெட்டியுமாக காரை விட்டு இறங்கினான் அவன்.

வங்கியின் பிரதான வாசலை நோக்கி இரண்டு பேர்களும் நடந்தார்கள். தடிமனான கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்புறம் வந்தார்கள்.

உள்ளே ஆண்களும், பெண்களும் மும்முரமாக குனிந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள். அருகில் மரத்தால் தடுத்துப் பிரிக்கப்பட்ட மானேஜரின் அறை இருந்தது. அந்த அறையின் கதவை மரியாதைக்காகத் தட்டி விட்டு இரண்டு பேரும் உள்ளே நுழைந்தார்கள்.

மானேஜர் தன் எதிரில் அமர்ந்திருந்த நாகரீக உடையணிந்திருந்த பெண்ணிடமிருந்து பார்வையை நகர்த்தி இவர்களைப் பார்த்தார்.

''மன்னிக்க வேண்டும். ஒரு வெளி நாட்டு காசோலையை டெபாசிட் செய்வது தொடர்பாக உங்களுடன் பேச வேண்டும். நீங்கள் முதலில் அவர்களின் காரியத்தை முடித்து விடுங்கள்'' என்றான் கிரண்.

''உட்காருங்கள் தயவு செய்து'' என்றார் மானேஜர்.

அந்தப் பெண்ணிற்கு அருகில் நான்கைந்து காலி நாற்காலிகள் இருந்தன. அவற்றில் இரண்டில் அமர்ந்தார்கள்.

ராவ் இப்போது அந்தப் பெண்ணைத் தெளிவாகப் பார்த்துவிட்டு மனதிற்குள் விசிலடித்தான். குனிந்து கிரண் காதில் கிசுகிசுத்தான்.

''இந்தப் பெண் யாரென்று தெரியுமா உனக்கு?''

''தெரியாதே...''

''இவள்தான் இன்றைய தமிழ் சினிமா ரசிகர்களின் கவர்ச்சிக் கன்னி. முன்னணி நட்சத்திரம் மயூரி. இவளுக்கு இந்த வங்கியில் கணக்கு இருக்கு போலிருக்கிறது.''

கிரண் சட்டென்று யோசித்தான். முடி

பக்கு வந்தான். இவள் பேசி முடித்துவிட் டுப் போகும் வரை காத்திருந்தால் அதற்குள் வங்கிக்கு உள்ளே வேறு யாராவது வந்து விடுவார்கள். இந்த நிமிடம் வங்கி ஊழியர் கள் தவிர இந்த நடிகை மயூரியும், நாங்க ளும் மட்டும். இவளை வைத்துக் கொண்டே காரியத்தை தொடங்கிவிட வேண்டியதுதான்.

''மன்னிக்க வேண்டும் சார். ஒரே ஒரு நிமிடம். என் பெயர் பாதர் அருள் ஜோசப். இவர் தொழில் அதிபர் பிரகாசம். ஒரு சின்ன உதவி செய்ய வேண்டும் நீங்கள்.''

மானேஜர் முழுக்கை நீலநிறச் சட் டையை அடர்த்தியான நீலநிற பாண்ட்டிற் குள் செலுத்தியிருந்தார். ஷூ அணிந்திருந் தார். லேசாக தொந்தி. லேசாக முன் வழுக்கை. லேசாக நரை. ஆனால் தடிமனாக கண்ணாடி அணிந்திருந்தார். வெற்றிலைக் காவியேறின பற்கள். நெற்றியில் சற்றே கலைந்த, காலையில் வைத்த விபூதி. தின கரன், எம்.காம்.

தினகரன், மயூரியிடம் வங்கியின் ஏதோ ஒரு டெபாசிட் திட்டம் பற்றி விரிவாக விளக்கிக் கொண்டிருந்தவர் அதை நிறுத்தி.

''சொல்லுங்கள். நான் என்ன செய்ய வேண் டும்?'' என்றார்.

கிரண் மேஜைக்குக் கீழே அவரின் வலது காலின் அருகில் ஒரு சிறிய பித்தான் தரை யில் இருப்பதைக் கவனித்தான். மரத் தடுப் பின் நடுவில் இருக்கும் கண்ணாடி வழியாக வெளியே நடக்கும் வங்கியின் இயக்கத்தை



இங்கிருந்தே பார்க்க முடிவதைக் கவனித் தான். சொன்னான்.

''கொஞ்சம் எழுந்து இப்படி வருகி றீர்களா?'' இவனும் எழுந்து கொண்டு அந்த அறைக்குள்ளேயே சற்றுத் தள்ளி நடக்க, அவர் அந்தப் பெண்ணுக்குத் தெரியாமல் ஏதோ சொல்ல விரும்புகிறார் என்று நம்பிய தினகர், சட்டென்று தன் சுழல் நாற்காலியை விட்டு எழுந்து கிரணை நோக்கி நடந்து வந் தார்.

கிரண் இப்போது திரும்பி அவசரமாக ஓடி வந்து அவருடைய சுழல் நாற்காலியில் அமர்ந்து கொள்ள, தினகர் புரியாமல் பார்த் தார். நடிகை மிரண்டு எழுந்து கொண்டாள்.

''என்ன ஆயிற்று ஃபாதர்?''

''ஒன்றும் ஆகவில்லை. உங்களுக்கு ஏதாவது ஆகாமல் இருக்க வேண்டுமானால் இந்த விநாடி முதல் கேள்வி கேட்பதை நிறுத்திக் கொள்ளுங்கள் தினகர் சார்.'' என்ற கிரண் தன் பைபிள் புத்தகத்தைப் பிரித்தான். உள்ளே ஒரு கைத்துப்பாக்கி வைக்குமள விற்கு பக்கங்களின் நடுவில் கத்தரித்து எடுக்கப்பட்டு, அங்கே பாடம் செய்யப்பட் டதைப் போல படுத்திருந்த அந்த கறுப்புப் பிசாசை கையில் எடுத்தான்.

''தினகர், மரியாதையாக என் எதிரில் அம ருங்கள். அல்லது இது தன் முதல் குண்டை துப்ப வேண்டியிருக்கும்.''

நடுக்கம் மேலிட தினகரன் அமர்ந்தார்.

ராவும் இப்போது தன் கோட் உள் பாக் கெட்டில் இருந்து துப்பாக்கி எடுத்துக்

கொண்டு, கிரணின் கண் ஜாடையைப் புரிந்து கொண்டு அதை நடிகை மயூரியின் நெற்றிப் பொட்டில் வைத்தான்.

"அய்யோ! என்ன இதெல்லாம்?"

கை இல்லாத பச்சை நிற ரவிக்கையும், நிறைய ஜிகினா வேலைப்பாடுகள் செய்த பச்சை நிற சேலையும் கட்டி, தன்னை அழ காய் ஒப்பனை செய்திருந்த மயூரி அதிர்ச்சி யில் வியர்த்துப் போனாள்.

"சத்தம் போடாதே மயூரி. நேரடியாக விஷயத்திற்கு வந்து விடலாம். இப்போது நாங்கள் இந்த வங்கியை கொள்ளை அடிக் கப் போகிறோம். மானேஜர் சார் ஒத்துழைக் கவில்லை என்றால் நிறைய பிணங்கள் விழும்."

"வேண்டாம், தயவுசெய்து வேண்டாம்."

கெஞ்சின தினகர் இந்த தனியறையில் நடக்கிற இந்த பரபரப்பான திடீர் விபரீத சம் பவத்தை இன்னும் வங்கியில் உள்ள யாரும் உணரவில்லையே. அபாய, அவசர அலா ரத்தை ஒலிக்கச் செய்ய வகை இல்லாமல் என் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு விட்டானே...

கேஷியர் தனிப்பகுதியில் ஒரு சுவிட்ச் இருக்கிறது. இதேபோல காலால் அழுத்தி னால் போதும். இப்போது பியூன் யாராவது உள்ளே வந்து இந்த நிலைமையைத் தெரிந்து கொள்ளலாம். வெளியிலிருந்தே யாராவது பார்த்தால் போதும். என் நாற்காலி யில் ஒரு பாதிரியார் உட்கார்ந்து இருப்ப தைப் பார்த்தால் சந்தேகம் வரும். புரிந்து



கொண்டு கேஷியரிடம் சொல்லி அந்த பித் தானை அழுத்தச் சொல்லலாம். சொன்னால் சில விநாடிகளில் போலீஸ் வரும்.

ஆனால் யாரும் இன்னும் உள்ளே கவ னித்ததாகத் தெரியவில்லையே.

தினகரன் தனக்குள்ளேயே பதைத்துக் கொண்டிருக்க...

"முதல் காரியமாக உன் தொலைபேசி எடுத்து உங்கள் கேஷியரை உடனே உங்கள் அறைக்கு வரச் சொல்லுங்கள். அவர் காலடி யில் உள்ள அலாரத்திற்கான சுவிட்சை அழுத்தச் சொல்லி சங்கேதமாக எதையும் தெரிவிக்கிற முயற்சி மட்டும் வேண்டாம். ரத்தம் சிந்த உங்களுக்கு ஆசை இருக்காது என்று நினைக்கிறேன்."

தினகரன் நடுங்கும் விரல்களால் உள் தொலைபேசியை எடுத்து, "மணிமாறன், கொஞ்சம் என் அறைக்கு உடனே வாங்க" என்று வைத்தார்.

சில விநாடிகளில் மணிமாறன் பான்பராக் பாக்கை மென்றபடி கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தவன் அதிர்ந்தான்.

அவனை துப்பாக்கி குறி பார்த்தது.

"கையைத் தூக்குங்கள் கேஷியர் அய்யா" என்ற கிரண், ராவைப் பார்த்தான். "இந்த மூன்று பேரையும் நான் பார்த்துக் கொள்கி றேன். நீ போய் வங்கியின் கதவை உள்புற மாகத் தாளிடு. அடுத்த கூடத்தில் இருக்கும் அத்தனை ஊழியர்களையும் துப்பாக்கி முனையில் நடத்திச் செல். பழைய புத்தகங் கள் வைப்பதற்கு இடதுபுறம் ஒரு விசால

மான அறை இருக்கிறது. அத்தனை பேரையும் அந்த அறைக்குள் தள்ளிப் பூட்டி விட்டு வா. இந்த மயூரியையும் அவர்களுடன் சேர்த்துப் போடு''

ராவ், மயூரியின் முதுகில் துப்பாக்கி முனையை வைத்து, ''ம்ம்...'' என்று உறுமி... அவள் தயக்கமாக நடந்தாள்.

அவளுடன் ராவ் அந்த அறையை விட்டு வெளியே வந்து நீளமான கவுண்டருக்கு ஓரத்தில் இருந்த திறப்பின் வழியாக உள் பகுதிக்கு வந்து, ''ஹலோ! நண்பர்களே! ஒரு நிமிடம் இங்கே கவனிக்க முடியுமா?'' என்றான் உரத்த குரலில்.

பல்வேறு வேலைகளில் இருந்த ஊழியர்கள் திரும்பிப் பார்த்தார்கள். டைப்ரைட்டர் இயந்திரத்தின் ஒலிகள் நின்றன.

''இந்தத் துப்பாக்கியின் குண்டு பாய்ந்து உயிர்விட யாருக்கு விருப்பம்? அவர்கள் மட்டும் உட்கார்ந்திருங்கள். மற்றவர்கள் அந்த பழைய புத்தகங்கள் போட்டு வைக்கும் அறைக்கு நடக்கலாம்.''

அத்தனை பேர் முகத்திலும் பீதி பரவியது. வியர்த்தது. எச்சில் விழுங்கினார்கள். நடந்தார்கள்.

ஊழியர்களுடன் மயூரியையும் உள்ளே அனுப்பின ராவ், ''உங்களில் யாராவது ஒரு வார்த்தை பேசினாலும் சரி, தப்பிக்க முயற்சி செய்தாலும் சரி, சுடுவேன். மீண்டும் வருவேன்'' என்றான். கதவைச் சாத்தினான். இவன் எடுத்து வந்திருந்த பூட்டைப் போட்டு பூட்டினான்.



பிறகு வங்கியின் கண்ணாடிக் கதவை அடுத்திருந்த இரும்பு ஷட்டரை இறக்கி தாளிட்டு விட்டு மானேஜரின் தனியறைக்கு வந்தான்.

''செய்தாயிற்று நண்பா'' என்றான்.

''நல்லது. இப்போது இந்த கேஷியரை துப்பாக்கி முனையில் இந்தப் பெட்டியோடு அழைத்துச் செல். தன் மேஜையில் இருக்கும் பணம், இரும்புப் பெட்டகத்தில் இருக்கிற பணம் எல்லாவற்றையும் எடுத்துத் தருவார். உயிர் விடுவதை விரும்ப மாட்டார். அதனால் அவசியம் ஒத்துழைப்பார். போங்கள் சார்'' என்றான் கிரண்.

வேறு வழியின்றி கேஷியர் மணிமாறன் ராவுடன் நடந்தான்.

தினகரன் செய்வதறியாமல் நின்று கொண்டிருந்தார்.



பெட்டி முழுக்க பணத்தை நிரப்பிக் கொண்டு ராவ் வரப் போகிறான். பிறகு மேனேஜரையும் கேஷியரையும் இந்த அறைக்குள் போட்டுப் பூட்டிக் கொண்டு புறப்பட வேண்டியதுதான்.

அதன் பிறகு அவர்கள் போலீசில் சொல்லி... அவர்கள் வருவதற்குள் வண்டி மாறி அலெக்சுடன் இணைந்து போய்க் கொண்டே இருக்கப் போகிறோம். கிரண் காத்

திருந்தான்.

கைகளைத் தூக்கிய நிலையில் தினகரும், கையில் துப்பாக்கியுடன் கிரணும் அந்த தனியறையில் இருக்க...

இப்போது தொலைபேசி ஒலிக்கத் தொடங்கியது.

தொலைபேசியை கவனிக்கா விட்டால் எதிர்முனையில் அழைப்பவருக்கு சந்தேகம் வரும். இது வங்கி எண் தானே, ஏன் எடுக்கவில்லை, இன்னும் வேலை நேரம் முடியவில்லையே என்று கேள்விகள் வரும். நேரில் வரலாம்.

தொலைபேசியை எடுத்தாக வேண்டும். நான் எடுத்தால் என் கவனம் திரும்புகிற ஒரு விநாடியை பயன்படுத்தி தினகர் என்மேல் பாய்ந்து என் துப்பாக்கியைத் தட்டி விட்டாலும் விடலாம்.

"தினகர், தொலைபேசியை எடுங்கள். யாராக இருந்தாலும் சரி, சுருக்கமாய் பேசி விட்டு வைத்து விடுங்கள். இங்கே கொள்ளை நடப்பதை தெரியப்படுத்தினால் உங்கள் மனைவி பொட்டு வைத்துக் கொள்ளும் பாக்கியத்தை இழந்து விடுவாள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு எடுங்கள்."

தினகர் ரிசீவரை எடுத்து காதில் வைத்து "ஹலோ" என்றார்.

"நான் பிராந்திய தலைமை அலுவலகத்திலிருந்து சீதாராமன் பேசுகிறேன். மேனேஜர் தினகர்தானே பேசுவது?"

"ஆமாம். தினகர்தான் பேசுகிறேன்."



"நீங்கள் நாளைக்கு என் அலுவலகத்திற்கு யாரை அனுப்ப உள்ளீர்கள்?"

"நமது நம்பிக்கைக்கு உரிய நந்தனம் பத்மநாபனை அனுப்பி வைக்கிறேன் சார்."

எதிர்முனையில் பேசிக் கொண்டிருந்த தலைமை அலுவலக உயர் அதிகாரி அதிர்ச்சியடைந்தார். நந்தனம் பத்மநாபனா? என்ன உளறுகிறார் இந்த ஆசாமி? ஆறு மாதத்திற்கு முன்பாக அந்த கிளை வங்கியில் கையாடல் செய்து என்னிடம் மாட்டிக் கொண்டு என் கையால் உத்தரவில் கையெழுத்துப் போட்டு அவனை வேலையில் இருந்து நீக்கினேனே... போலீசில் கொடுத்த வழக்கு விசாரணை இன்னும் நடந்து கொண்டிருக்கிறதே... என்ன ஆயிற்று மேனேஜர் தினகருக்கு.

"தினகர், ஏன் இப்படி உளறுகிறீர்கள்?"

"எனக்கு வேறு வழியில்லை சார். தயவு செய்து என் நிலைமையைப் புரிந்து கொள்ளுங்கள்."

சீதாராமனுக்கு தலையைப் பிய்த்துக் கொள்ளத் தோன்றியது. சட்டென்று அவர் மூளையில் ஒரு மின்னல். தினகர் என்ன சொன்னார்? எனக்கு வேறு வழியில்லை, தயவுசெய்து என் நிலைமையைப் புரிந்து கொள்ளுங்கள்.

'என்ன அர்த்தம்? அங்கே ஏதோ நிலைமை சரியில்லை என்று அர்த்தம்.'

"தினகர், வங்கியில் ஏதாவது பிரச்சினையா?"

"ஆமாம்" என்றார் தினகர் ஒருமுறை கிர

ணைப் பார்த்துக் கொண்டு.

கிரண் அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துக் கொண்டிருந்தான்.

"நீங்கள் மிரட்டல் முனையில் நிற்கிறீர்களா தினகர்?"

"ஆமாம் சார்" என்றார் தினகர்.

"கடவுளே! கொள்ளையா?"

"அப்படித்தான் சார்..."

"எத்தனை பேர்?"

"இரண்டு நாள் அவகாசம் கொடுங்கள் சார்."

எனில்... இரண்டு பேர் என்று அர்த்தமா?

"தினகர், நீங்கள் கவலைப்படாதீர்கள். நான் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்"

சீதாராமன் தொலைபேசியை வைத்துவிட்டு உடனே தொலைபேசியை எடுத்தார். அவசர போலீசிற்கு சொன்னார். வங்கி இருக்கும் பகுதியில் உள்ள காவல் நிலையத்திற்குச் சொன்னார். கமிஷனர் அலுவலகத்தில் சொன்னார். பிறகு தன் உயர் அதிகாரிகளுக்குச் சொன்னார். எழுந்து கொண்டார்.

கேஷியர் மணிமாறன் தரையில் விரித்து வைக்கப்பட்ட பெட்டிக்குள் இரும்புப் பெட்டகத்தில் இருந்த பணத்தை எல்லாம் கட்டுக்கட்டாக அள்ளி பதைப்போடு வைத்துக் கொண்டிருந்தான்.

"பிரகாசம்? என்ன ஆயிற்று?"

கிரண் குரல் கேட்டது ராவிற்கு.

"பொறுங்கள் ஃபாதர்! எத்தனைக் கட்டுகள்! அடுக்க வேண்டாமா?" என்ற ராவ், "நகைகள் எல்லாம் எந்தப் பெட்டகத்தில் இருக்குமோ அதைத் திற" என்றான்.

"அதைத் திறக்க இரண்டு சாவிகள் வேண்டும். ஒன்றுதான் என்னிடம் இருக்கிறது. மற்றொரு சாவி மேனேஜரிடம் இருக்கிறது."

ராவ் பெட்டியைக் காலால் மூடினான். பார்வையை மணிமாறன் மேல் வைத்தபடி குனிந்து பெட்டியை எடுத்துக் கொண்டான்.

"நட! மேனேஜரிடம் இருந்து மற்றொரு சாவியை வாங்கி வரலாம்."

இருவரும் மீண்டும் தனியறைக்கு வந்தார்கள்.

"நகைகள் இருக்கும் பெட்டகத்தைத் திறக்க மற்றொரு சாவி இந்த தினகரிடம் இருக்கிறதாம்" என்றான் ராவ்.

"பணம் வரைக்கும் போதுமே. புறப்பட்டாக வேண்டும் நண்பா."

"வந்தது வந்து விட்டோம். மற்றொரு சந்தர்ப்பம் எப்போது, எப்படி அமையுமோ தெரியாது. நம் கையில் ஆயுதம் இருக்கிறது. இவர்கள் கட்டுப்பட்டேயாக வேண்டும். எதற்கு ஃபாதர் தயக்கம்? நான் போய் நகைகளும் கொஞ்சம் வாரிக் கொள்கிறேன்."

அரை மனதுடன் சம்மதித்தான் கிரண்.

தினகரை மிரட்டி சாவி வாங்கிக் கொண்டு மீண்டும் கேஷியரும், ராவும் இரும்பு பாதுகாப்பு அறைக்குள் சென்றார்கள்.

அடுத்த மூன்றாவது நிமிடத்தில்...

காவல் துறைக்கு உரிய எச்சரிக்கை ஒலி திடீரென்று எழும்பியது.

பதறிப் போனான் கிரண்.

அவசரமாக மேனேஜரின் அறையின் ஒரு ஓரத்தில் இருந்த ஜன்னலை சமீபித்தான். அதன் திரையை மெதுவாக விலக்கிப் பார்த்து அதிர்ந்தான்.

வங்கிக்கு வெளியே வரிசையாக ஏழெட்டு காவல் துறை ஜீப்புகள் நின்றிருந்தன. நிறைய போலீஸ்காரர்கள் இறங்கி அரை வட்டமாக நின்றார்கள். தினகர் மனதிற்குள் பூரித்துப் போனார்.

"பிரகாசம்" என்று கத்தினான் கிரண்.

ராவ், மணிமாறனையும் இழுத்துக் கொண்டு அவசரமாக வந்தான்.

"என்ன? என்ன?"

"மண்ணாங்கட்டி! உடனேயே போய் விடலாம் என்று சொன்னேன் இல்லையா? இப்போது பார். வாசலில் பார்! எப்படியே செய்தி போய் இருக்கிறது. போலீஸ் படை யோடு நிற்கிறது. வாசல் வழியாக நாம் வெளி யேறவே முடியாது இப்போது."

ராவ் சென்று கிரணைப் போல் ஜன்னல் திரையை நகர்த்திப் பார்த்து விட்டு வந்தான் அவன் முகம் வெளிறிப் போயிருந்தது.

"போலீசுக்கு எப்படி செய்தி போயிற்று?" என்றான் ராவ்.

"இப்போது அதுவா பிரச்சினை? இப் போது என்ன செய்யப் போகிறோம்? எப்ப இங்கிருந்து தப்பப் போகிறோம்?"



"இந்த வங்கிக்கு இந்த முன்வாசல் தவிர வேறு வழி இருக்கிறதா?" ராவ் தினகரைப் பார்த்துக் கேட்டான்.

"வேறு வழி எதுவும் இல்லை" என்ற தினகரை கிரண் பளார் என்று அறைந்தான். "நீ தானே போலீசுக்குத் தகவல் சொன்னாய்?"

"இல்லை. நான் உங்கள் முன்னாலேயே தானே நிற்கிறேன்."

இப்போது வெளியில் இருந்து ஒரு லவுட் ஸ்பீக்கர் வழியாக உதவி கமிஷனர் பாண்டியன் கத்திப் பேசினார். "உள்ளே இருக்கும் குற்றவாளிகளே... இந்த வங்கியைச் சுற்றிலும் ஆயுதங்களுடன் போலீஸ் படை நிற்கிறது. உங்கள் முயற்சி இனி வெற்றி பெறாது. மரியாதையாக நீங்கள் இருவரும் எங்களிடம் சரணடைந்து விடுவது நல்லது."

இந்தக் குரல் உள்ளே கேட்டது. கிரணை மிகவும் உசுப்பி விட்டது.

இத்தனை நாட்களாகப் பொறுமையுடன் திட்டம் போட்டு, அதை செயல்படுத்திப் புறப்படும் கடைசி நிமிடத்தில் இப்படி மாட்டிக் கொள்வதா? கற்பனைக் கோட்டைகள் எல்லாம் சரிந்து விழுவதா?

கூடாது. இந்தத் திட்டத்தில் வெற்றி பெற்றே ஆக வேண்டும்.

எப்படியும்!

எப்படி?

கிரண் யோசிக்கத் தொடங்கினான் தீவிரமாக.




வங்கிக்கு வெளியே உதவி கமிஷனர் பாண்டியன் தலைமையில் சில இன்ஸ்பெக்டர்கள் மற்றும் சிறப்பு போலீஸ் அதிகாரிகள் கொண்ட குழு வட்டமாக நின்று அவசர ஆலோசனை நடத்தியது.

''நாம் பலமுறை சரணடையச் சொல்லி எச்சரிக்கை விடுத்து பதினைந்து நிமிடங்கள் ஆகின்றன. உள்ளே இருந்து அவர்கள் யாரும் வெளியே வரவில்லை. இப்போது அதிரடியாக கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழையலாமா?'' என்றார் இன்ஸ்பெக்டர் சாலமன்.

''தப்பு. பெரிய தப்பு அது. வங்கியைக் கொள்ளையடிக்க வந்தவர்கள் கை வீசிக் கொண்டு வந்திருக்க மாட்டார்கள். நிச்சயமாக அவர்களிடம் ஆயுதங்கள் இருக்கும். அனேகமாக துப்பாக்கிகள். உள்ளே எத்தனை பேர் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. கொள்ளை அடிக்க வந்த இரண்டு பேரை பிடிப்பது மட்டுமில்லை நம் நோக்கம். உள்ளே அவர்களிடம் பணயக் கைதிகளாக சிக்கியிருக்கும் அத்தனை பேரையும் உயிர் சேதமில்லாமல் காப்பாற்றியாக வேண்டும் சாலமன். இப்போது நம் சக்தியை விட அதிகமாக பிரயோசிக்க வேண்டியது புத்தியைத் தான். முள்



ளில் விழுந்த சேலையை எடுக்கிற பக்குவத்துடன் நாம் நடந்து கொள்ள வேண்டும்'' என்றார் அனுபவமிக்க பாண்டியன்.

எல்லாரும் அவர் சொன்னதை ஆமோதித்தார்கள்.

''இப்போது இப்படிக் காத்துக் கொண்டிருப்பது ஒன்றுதான் நமக்கு வேலையா? உள்ளே அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றே புரியவில்லையே...'' படபடத்தார் சாலமன்.

''கொஞ்சம் பொறுமையாக இருங்கள். முதலில் நமக்கும் அவர்களுக்கும் ஒரு தொடர்பு வேண்டும். அருகாமை தொலைபேசிக் கம்பத்தில் இருந்து உடனடியாக ஒரு தொலைபேசித் தொடர்பை இங்கே உருவாக்குங்கள். அதுதான் முதல் வேலை இப்போது'' என்றார் பாண்டியன்.

மானேஜர் தினகரும், கேஷியர் மணிமாறனும் இப்போது இரண்டு நாற்காலிகளில் உட்கார வைக்கப்பட்டு கைகள் பின்புறம் வைக்கப்பட்டு கட்டிப் போடப்பட்டிருந்தார்கள்.

''எங்களைக் கட்டிப் போட்டு விட்டு என்ன செய்வதாக உத்தேசம்?'' என்றான் மணிமாறன்.

அவனை பளார் என்று கன்னத்தில் அறைந்த கிரண், ''கொஞ்சம் நேரம் அமைதியாக இருக்கிறாயா?'' என்றான்.

கிரண், ராவ் இருவரும் அந்த அறையை விட்டு வெளியேறி உள் கூடத்திற்கு வந்தார்

கள். இப்போது அவர்களால் தனிமையில் பேச முடிந்தது.

"என்ன செய்யப் போகிறோம் கிரண்?" என்றான் ராவ்.

"நிச்சயமாக சரணடையக் கூடாது ராவ்."

"வெளியே எவ்வளவு போலீஸ் தெரியுமா?"

"இருக்கட்டுமே! நம் வசம் எவ்வளவு உயிர்கள் தெரியுமா?"

"என்ன சொல்கிறாய்?"

"நடிகை மயூரியையும் சேர்த்து பதினைந்து உயிர்கள் நம் வசம் பணயமாக இருக்கின்றன ராவ். இந்த உயிர்களை இழக்க காவல்துறை சம்மதிக்குமா?"

"சம்மதிக்காதுதான்."

"இவர்களை கவசமாக வைத்து நாம் பணத்தோடு தப்பிக்க வேண்டும் ராவ்."

"எப்போது?"

கிரண் மணி பார்த்தான். இரண்டரையை நெருங்கிக் கொண்டிருந்தது.

"ராவ், இப்போது மணி இரண்டரை. இப்போது நாம் தப்பிப்பது சரியாகப் படவில்லை. நம்மை தப்பவிட்டு போலீஸ் வேறு குறுக்கு வழி யோசித்துப் பிடித்து விடும். அதனால் இரவுதான் வசதி. இன்னும் நாலு மணி நேரம் போய்விட்டால் இருட்டி விடும். பிறகு நாம் தப்பிக்கலாம்."

"அதுவரைக்கும்?"

"இங்கே மிகமிகப் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்." என்று கிரண் சொன்னபோது தொலைபேசி ஒலித்தது.



அவனுக்கு அருகில் இருந்த மேஜை மீதுள்ள தொலைபேசியும், மானேஜர் அறைக்குள் இருந்த தொலைபேசியும் ஒரே நேரத்தில் ஒலிக்கத் தொடங்கின.

கிரண் கை நீட்டி இங்கே ஒலிவாங்கியை எடுத்ததும் உள்ளே அடிப்பது நின்றுபோனது. "ஹலோ" என்றான் கிரண்.

"நான் உதவி கமிஷனர் பாண்டியன் பேசுகிறேன். பேசுவது யார்? நான் வங்கிக்கு வெளியில் இருந்து தான் பேசுகிறேன். பேசுவது குற்றவாளியா?"

"ஆமாம். என் பெயர் அருள்ஜோசப்" என்றான் கிரண்.

"நல்லது. வங்கியைக் கொள்ளையடிக்க நீங்கள் முயன்றீர்கள். செய்தியறிந்து நாங்கள் வந்து விட்டோம். எந்த வழியிலும் இப்போது நீங்கள் தப்பித்துப் போக முடியாது. அதனால் நீங்கள் இரண்டு பேரும் சரணடைந்து விடுங்கள்."

கிரண் வாய் விட்டுச் சிரித்தான்.

"உதவி கமிஷனர் சார்! சரணடைவதற்கு நாங்கள் என்ன வாத்து மடையர்களா? எங்கள் இருவரிடமும் ஜெர்மனி நாட்டின் தயாரிப்பில் அற்புதமான இரண்டு கைத்துப்பாக்கிகள் இருக்கின்றன. இப்போது எங்கள் பிடியில் மொத்தம் பதினைந்து பேர் இருக்கிறார்கள்."

"வங்கியின் ஊழியர்கள் மொத்தம் பதினான்கு பேர் தானே?"

"விசாரித்து விட்டீர்களா அதற்குள்? ஒரு நபர் வாடிக்கையாளர். சாதாரண வாடிக்கை

யாளர் இல்லை. மிகமிக பிரபலமான பெண் மணி. நடிகை மயூரி சார். இந்த பதினைந்து பேரில் முதலில் யாரைச் சுடுவது என்று நான் யோசிக்கிறேன்.''

''இதோ பார் அருள்ஜோசப், பைத்தியக்கா ரத்தனமாக எதையும் செய்யாதே.''

''அது பைத்தியக்காரத்தனமா, இல்லை கெட்டிக்காரத்தனமா என்று நீங்கள் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை சார். நான் உங் களை அழைப்பதென்றால் எப்படி சாத்தியம் சார்?''

''ஒரு எண் சொல்கிறேன். குறித்துக் கொள். அந்த எண்ணைச் சுழற்றினால் என் ஜீப்பில் தற்காலிகமாக பொருத்தப்பட்டுள்ள தொலைபேசியில் என்னை நீ தொடர்பு கொள்ளலாம்'' என்ற பாண்டியன் எண் சொன் னார். கிரண் குறித்துக் கொண்டான்.

''சரி. வைத்து விடுங்கள் சார். கொஞ்ச நேரத்தில் நானே அழைக்கிறேன். எங்களைப் பிடிக்கிற நோக்கத்தில் விபரீதமாக ஏதாவது முயற்சியில் இறங்கி இங்கே இருக்கிற பதி னைந்து உயிர்களை... குறிப்பாக மயூரியை இழந்து விடாதீர்கள் சார்.''

எதிர்முனை வைக்கப்பட்டதும் பாண்டி யன் ரிசீவரை வைத்தார். அத்துடன் இணைக் கப்பட்டிருந்த டேப்ரெக்கார்டரை நிறுத்தினார். தன் முகத்தை ஆர்வத்துடன் பார்த்துக் கொண் டிருந்த மற்ற அதிகாரிகளை ஏறிட்டார். போனில் அவன் சொன்ன விபரங்களைச் சொன்னார்.

''நம் அடுத்த நடவடிக்கை?'' என்றார்



சாலமன்.

''நடிகை மயூரி இதில் வந்து மாட்டிக் கொண்டது பெரிய சிக்கல் இப்போது. பத்திரி கைக்காரர்கள் இன்னும் முக்கியத்துவம் கொடுத்து எழுதத் தொடங்கி விடுவார்கள். நாம் மயூரி சிக்கியிருப்பதைத் தெரிவிக்காம லும் இருக்க முடியாது'' என்றார் பாண்டியன்.

''நியாயம்தான் சார். உள்ளே இருப்பவர்க ளின் எண்ணம் என்ன?''

''புரியவில்லை. ஆனால் மிக துணிச்சலா கப் பேசுகிறார்கள். மறுபடி அவனே அழைப்ப தாகச் சொல்லியிருக்கிறான்.'' என்றார் பாண்டி யன் கவலையோடு.

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, நடு மண்டையை சொறிந்து கொண்டு யோசித்தார்.

அந்த இடம் முழுவதும் திருவிழா போல மக்கள் கூட்டம் சேர்ந்திருந்தது. போக்குவரத்து ஸ்தம்பித்து வேறு வழிகளில் திசை திருப்பி அனுப்ப ஆரம்பித்தார்கள். செய்தியறிந்து பத் திரிகையாளர்கள், புகைப்படக்காரர்கள் அங்கு விரைந்தார்கள். ஏராளமான போலீஸ்காரர்கள் ஆயுதங்களுடன் வங்கிக்கு வெளியே காத்தி ருப்பதை புகைப்படம் எடுத்தார்கள்.



கத்திப்பாரா சந் திப்பு அருகில் தன் காருடன் காத்திருந்த அலெக்ஸ் தன் கைக் கடிகாரத்தைப் பார்த் துக் கொண்டான்.

மணி மூன்றை நெருங்கிக் கொண்டிருந்தது.

என்ன ஆயிற்று இவர்களுக்கு? ஒன்றே முக்காலுக்கெல்லாம் வந்து விடுவதாகச் சொன்னார்களே? வங்கியில் அதற்கு மேல் வேலை இல்லையே. ஏதாவது சிக்கலாகி விட்டதா? திட்டத்தில் ஏதாவது தவறு ஏற்பட்டு மாட்டிக் கொண்டு விட்டார்களா? எப்படித் தெரிந்து கொள்வது?

இன்னும் கொஞ்ச நேரம் காத்திருக்கலாம் என்று தீர்மானித்தான் அலெக்ஸ்.

கிரண், ராவ் இரண்டு பேரும் அந்த பழைய புத்தகங்கள் வைக்கும் அறைக்குள் பூட்டைத் திறந்து உள்ளே வந்தார்கள்.

கீழே உட்கார்ந்திருந்த அத்தனை பேரும் எழுந்து கொண்டார்கள்.

''தயவுசெய்து எங்களை எல்லாம் விட்டு விடு'' கண்ணீருடன் கேட்டாள் ஒரு பெண்.

நடிகை மயூரி. ''உனக்கு எவ்வளவு பணம் வேண்டும், சொல். என்னை விட்டு விடு. நான் தருகிறேன்'' என்றாள் படபடப்பாக.

''அந்தப் பெண்ணைப் பார்த்தாயா? எங்களை எல்லாம் விட்டுவிடு என்று கெஞ்சுகிறாள். ஆனால் நீ? உன்னை மட்டும் விடச் சொல்லி பேரம் பேசுகிறாய். எத்தனை சுயநலம்!'' என்ற கிரண், ராவ் பக்கம் திரும்பி, ''யாரை?'' என்றான்.

ராவ் வியர்த்துப் போன அத்தனை முகங்களையும் பார்த்தான்.

''மயூரி?'' என்றான்.



''தப்பு. அவள் துருப்புச் சீட்டு.''

''நீயே தேர்ந்தெடு.''

''சரி. மொத்தம் இங்கே பதிமூன்று பேர் இருக்கிறீர்கள். உங்களில் ஆறு பேர் பெண்கள். தனியாக நில்லுங்கள். மிச்சம் ஏழு ஆண்கள். உங்களில் திருமணமாகாதவர்கள் மட்டும் கை தூக்குங்கள்.''

மூன்று பேர் கை தூக்கினார்கள்.

''மூன்று பேரில் அனாதை யார்? அதாவது அப்பா, அம்மாவை காப்பாற்ற வேண்டிய, தம்பி, தங்கைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பு இல்லாத ஆள் யார்?''

''நான்'' என்றான் அவன்.

''உன் பெயர்?''

''ஜெயபால்.''

''நீ மட்டும் என்னோடு வா''

''அவரை மட்டும் எதற்காக அழைத்துக் கொண்டு செல்கிறீர்கள்?'' ஒருவன் கேட்டான்.

கிரண் அதற்கு பதில் சொல்லாமல் ஜெயபாலை நடத்திக் கொண்டு வெளியே வந்தான். ராவ் அந்த அறையிலேயே துப்பாக்கி பிடித்தபடி நின்றான்.

''ஜெயபால், போ! போய் வாசல் கதவு அருகில் நில்.''

நின்றான். கண்ணாடிக் கதவுக்குப் பின்னால் கீழே இறக்கி விடப்பட்ட இரும்பு ஷட்டர்.

''கண்களை மூடிக் கொள் ஜெயபால்.''

''எதற்காக?''

''சுடும்போது பயமாக இருக்கும்.''

''அய்யோ!'' அவன் விழிகள் விரிந்தன.

''மன்னித்துக் கொள்! என் திட்டத்திற்கு ஒரு உயிர்ப்பலி தேவைப்படுகிறது'' என்ற கிரண், ஜெயபாலை மார்பில் குறி பார்த்து சுட்டான்.

ஜெயபாலின் இதயம் பொத்தல் போடப்பட்டு, ரத்தம் பீய்ச்சி அடித்தது. உடனே கீழே சரிந்தான் ஜெயபால். அவன் உடல் தரை தொட்டபோது உயிர் பிரிந்திருந்தது.

அறைக்குள் அத்தனை பேர் முகமும் திகிலில் சிவக்க...

''உங்கள் நண்பரை சுட வேண்டியதாகி விட்டது. உங்களில் யாராவது எதிர்ப்பு தெரிவித்தால், மறுபடி துப்பாக்கியை உபயோகிக்க வேண்டி வரும். அமைதியாக நண்பருக்கு அஞ்சலி செலுத்துங்கள்''

ராவ் கதவை சாத்திப் பூட்டினான்.

''உள்ளே துப்பாக்கியால் சுட்ட சத்தம் கேட்கவில்லை?'' என்றார் சாலமன்.

சிகரெட்டை கீழே போட்டு அணைத்த பாண்டியன், ''ஆமாம்'' என்று சொல்ல... ஜீப்பிற்குள் வைக்கப்பட்டிருந்த தற்காலிக தொலைபேசி ஒலிக்கத் தொடங்கியது. எடுத்தார்.

''ஹலோ, உதவி கமிஷனர் பாண்டியன் பேசுகிறேன்''

''நான்தான் அருள்ஜோசப்''

''உள்ளே துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டதே?''

''அதைப் பற்றி சொல்லத்தான் அழைத்தேன். பாவம்! ஒரு அப்பாவியை என் துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட குண்டு துளைத்து சாகடித்து விட்டது.''

''ஏன் சுட்டாய்?''

''லேசாக எதிர்ப்பு காட்டினான், சுட்டேன். தவிரவும் நாங்கள் வைத்திருப்பது தீபாவளி துப்பாக்கிகள் அல்ல என்பது உங்களுக்குத் தெரிய வேண்டாமா?''

''அய்யோ! அதற்காக சுட வேண்டுமா? உயிர் இருக்கிறதா?''

''பத்தடி தூரத்தில் நின்று சரியாக மார்பில் சுட்டால் உயிர் இருக்குமா உதவி கமிஷனர் சார்?''

''ஏன் இப்படிச் செய்கிறாய்?''

''இது கேள்வி. இப்போது வங்கியின் இரும்பு ஷட்டரை மெதுவாக கொஞ்ச உயரம் தூக்கி பிணத்தை வெளியே தள்ளப் போகிறேன். அதைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்கு அனுப்புங்கள். அப்புறம்... இப்போது முதல் ஐந்து நிமிடங்கள் அவகாசம் தருகிறேன். அதற்குள் உங்கள் ஒரு ஜீப்பைத் தவிர மற்ற அத்தனை போலீஸ் ஜீப்புகளும் இந்த இடத்தை விட்டுக் காலி செய்தாக வேண்டும். போலீஸ் கான்ஸ்டபிள்கள் அத்தனை பேரும் விலகியாக வேண்டும். ஆறாவது நிமிடம் நான் எட்டிப் பார்ப்பேன். சொன்னபடி இல்லாவிட்டால் இரண்டாவது முறையாக என் துப்பாக்கி வெடிக்கும் சத்தத்தைக் கேட்பீர்கள்.''

''இரு... இரு... நான் சொல்வதைக் கொஞ்சம் கேள்.''

"இப்போதைய சூழ்நிலையில் நான் சொல்வதைத்தான் நீங்கள் கேட்க வேண்டுமே ஒழிய... நீங்கள் சொல்வதை நான் கேட்க வேண்டியதில்லை சார்."

எதிர் முனை வைக்கப்பட்டது.

சில விநாடிகளில் வங்கியின் இரும்பு ஷட்டர் ஒன்றரை அடி உயரம் மட்டும் மேலே உருண்டது. ஷூ அணிந்த கால்கள் ஜெயபாலின் பிணத்தை வெளியே தள்ளி உதைத்து, ஷட்டரை மீண்டும் இறக்கியது.

இந்தக் காட்சியை பல புகைப்படக்காரர்கள் படம் எடுத்துக் கொண்டார்கள். தொலைக்காட்சியில் இருந்து வந்துவிட்ட கேமிராக்காரர் தன் வேன் மீதிருந்து காட்சியைப் பதிவு செய்தார்.

ஜெயபாலின் பிணம் ஒரு ஸ்ட்ரெச்சரில் வைத்து தூக்கிச் செல்லப்பட்டது. ஆம்புலன்ஸ் வேனில் ஏற்றப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டது.

பாண்டியன் அவசரமாக ஆலோசனை நடத்தினார். கிட்டே வந்து கேள்வி கேட்ட ஒரு பத்திரிகை நிருபர் மேல் சீறி விழுந்தார்.

"பயங்கரமான தீவிரவாதிகள் போல தெரிகிறார்கள். அவர்கள் சொன்னபடி நடந்து கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை நமக்கு."

அவசரமாக உத்தரவுகள் இடப்பட்டன. ஜீப்புகள் விலகத் தொடங்கின. போலீஸ்காரர்கள் அனுப்பப்பட்டார்கள். நிறைய பேர் சீருடை தவிர்த்து சாதாரண உடைகளில் ஆங்காங்கே பதுங்கியிருக்கச் செய்யப்பட்



டார்கள்.

இப்போது பாண்டியன் வங்கியின் எண்ணை சுழற்றினார்.

எதிர்முனையில் எடுக்கப்பட்டு, "ஹலோ..."

"அருள்ஜோசப், நீ சொன்னபடி போலீஸ்காரர்களை விலகிச் செல்ல சொல்லி விட்டேன். மறுபடி யாரையும் சுட்டு விடாதே."

"அது என் கோரிக்கைகளை எவ்வளவு தூரம் நீங்கள் சரிவர நிறைவேற்றப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்தது."

"என்ன உன் கோரிக்கை?"

"எனக்கு இரண்டு வாகனங்கள் வேண்டும். ஒன்று பத்து பேர் அமரக் கூடிய வசதியுடன் ஒரு வேன். மற்றொன்று ஒரு அம்பாசிடர் கார். இரண்டிலும் பெட்ரோல் முழு அளவில் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். ஏற்பாடு செய்கிறீர்களா?"

"எதற்காக?"

"அதெல்லாம் செல்ல வேண்டிய அவசியமில்லை. ஏற்பாடு செய்ய முடியுமா, முடியாதா?"

"அவசியம் செய்கிறேன். எத்தனை மணிக்கு வேண்டும்?"

"ஐந்து மணிக்கு தயாராக இருக்க வேண்டும். வங்கியின் வாசலில் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்."

"சரி."

"அந்த வாகனங்களுக்குள் போலீஸ் அதிகாரிகள் பதுங்கி இருக்கும் விஷமத்தனமான முயற்சிகள் வேண்டாம்."

''சரி.''

''அந்த வாகனங்களை நீங்கள் யாரும் தொடரக் கூடாது.''

''தொடரவில்லை.''

''பிறகு... ஒரு கேன் நிறைய் பெட்ரோல் தேவை. அதை காருக்குள் வைத்து விடுங் கள்.''

''சரி.''

''அவ்வளவுதான்.''

''இரு, வைத்து விடாதே! உள்ளே மற்ற வர்கள் பத்திரமாக இருக்கிறார்களா?''

''பத்திரமாக இல்லை என்றால் ஜெய பால் போலவே ஷட்டர் வழியாக உருட்டி விட்டிருப்பேனே?''

''உன் கோரிக்கைகளை நாங்கள் நிறை வேற்றுவது போல எங்கள் கோரிக்கை ஒன்றை நீ நிறைவேற்றலாமா?''

''என்ன கோரிக்கை?''

''உள்ளே இருக்கிற பெண்களை மட்டும் விடுதலை செய்துவிடு.''

''மாட்டேன்.''

''அவர்கள் பலவீனமானவர்கள். பயத்தி லேயே சிலருக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டு விட வாய்ப்பிருக்கிறது. உன் கோரிக்கைப் படி வேன், கார், பெட்ரோல் எல்லாம் ஏற் பாடு செய்கிறேன். இந்த ஒரு கோரிக்கை மட் டும் ஏற்றுக் கொள்.''

''நண்பனிடம் கலந்து ஆலோசிக்கி றேன்.''

எதிர்முனை துண்டிக்கப்பட்டதும் சலிப்பு டன் ஒலிவாங்கியை வைத்தார் பாண்டியன்.



அவரை அதிகாரிகள் சூழ்ந்து கொண்டார்கள்.

''சார், வேன், கார் இரண்டும் கேட்டிருக்கி றான். அதனால் உள்ளே சிக்கியிருக்கும் யாரையும் அவன் விடுதலை செய்யப் போவ தில்லை. அவர்களை பணயக் கைதிகளாக தன்னுடன் அழைத்துச் செல்லப் போகிறான் அந்த அருள்ஜோசப்.''

''அவன் அந்த வகையில் தப்பி விட்டால் நம் காவல் துறைக்கே பெரிய அவமானம் சார்.''

''இதை எப்படியாவது தடுத்து நிறுத்தியே ஆக வேண்டும்.''

''அந்த வேனிலும் காரிலும் எலெக்ட்ரா னிக் கருவிகளை ஒளித்து வைத்து விட லாம். அவர்கள் செல்லும் இடத்தை அவை சங்கேதமாக நமக்கு உணர்த்தும். நேரடியாக தொடர வேண்டாம். நாம் யாரும் தொடர வில்லை என்று அவனை நம்ப வைத்து திடீ ரென்று சென்று மடக்க வேண்டும்'' என்று பாண்டியன் விவரிக்கத் தொடங்கினார்.




நான்கு மணி வரை காத்திருந்த அலெக்ஸ் வெறுத் துப் போனான்.

இத்தனை நேர மாக வரவில்லை என்றால் நிச்சயம் ஏதோ சிக்கல்தான்.

அலெக்ஸ் காரில் அமர்ந்தான். புறப்பட் டான். நேராக வங்கியைக் குறி வைத்து ஓட்

டினான்.

வங்கி இருக்கும் சாலையைத் தொடும் முன்பாகவே போக்குவரத்து போலீசாரால் தடுக்கப்பட்டான். வேறு திசையில் செல்லுமாறு கோரப்பட்டான்.

"ஏன் சார்? இந்தத் தெருவில் என்ன பிரச்சனை?" என்றான் அலெக்ஸ்.

"ஒரு வங்கிக்குள் இரண்டு கொள்ளைக்காரர்கள் இருந்து கொண்டு, போலீஸ்காரர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்."

அலெக்சிற்கு பாதி புரிந்து விட்டது.

அடுத்த தெருவில் காரை நிறுத்தினான். நடந்து அந்த தெருவுக்கு வந்தான். குறிப்பிட்ட வங்கியை நெருங்கினான். ஒரே ஒரு போலீஸ் ஜீப்பும், சில அதிகாரிகளும் நின்றிருப்பதைப் பார்த்தான். அங்கே மக்கள் தீவு தீவாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு ஆசாமியை நெருங்கி விசாரித்தான்.

"என்ன நடக்கிறது சார் இங்கே?"

"இங்கே இந்த வங்கிக்குள்ளே கொள்ளையடிப்பதற்காக இரண்டு பேர் உள்ளே சென்றிருக்கிறார்கள். செய்தி தெரிந்து போலீஸ் வந்து விட்டது. அவர்கள் உள்ளே இருந்து தப்பிக்க முடியாமல் மாட்டிக் கொண்டு விட்டார்கள். அதேசமயம் உள்ளே இருக்கும் வங்கி ஊழியர்களை சுட்டு விடுவோம் என்று மிரட்டுகிறார்கள். ஏற்கனவே ஒருவரை கொலை செய்து பிணத்தை வெளியே தள்ளி விட்டார்கள். இப்போது அவர்களை சரணடையச் சொல்லி தொலைபேசி மூலம்



போலீஸ் அதிகாரிகள் கேட்கிறார்கள். அவர்கள் மறுக்கிறார்கள். தப்பித்துச் செல்ல சில கோரிக்கைகளை வைத்து உள்ளார்கள். தற்போது என்ன நடக்கும் என்றே தெரியவில்லை. இதுதான் நிலைமை."

அலெக்சுக்கு எல்லாம் தெளிவாக இப்போது விளங்கியது.

இப்போது இதில் தன் பங்கு என்ன என்று யோசித்தான். அந்தக் கூட்டத்தை விட்டு விலகி நடந்தான். இரண்டு தெருக்கள் தள்ளி இருந்த, காசு போட்டுப் பேசுகிற பொதுத் தொலைபேசிக் கூண்டை நோக்கி நடந்தான்.

டெலிபோன் ஒலித்தது.

"கிரண், அந்த உதவி கமிஷனர்தான் பேசுவான். பெண்களை மட்டும் விடுதலை செய்யச் சொல்லி மறுபடி வற்புறுத்துவான். திட்டவட்டமாக முடியாது என்று சொல்லி விடு" என்றான் ராவ்.

"அப்படித்தான் சொல்லப் போகிறேன்" என்று தொலைபேசியை எடுத்த கிரண், "சொல்லுங்கள் சார்" என்றான்.

கிரணின் குரலை உடனே புரிந்து கொண்ட அலெக்ஸ், "முட்டாள்! நான் அலெக்ஸ் பேசுகிறேன்."

"பெயரைச் சொல்லாதே முட்டாள்! உன்னிடமிருந்து போன் வரும் என்று நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருந்தேன் நான்."

"நடந்த குழப்பங்கள், இப்போதுள்ள நிலைமை எல்லாம் எனக்குத் தெரியும். இப்

போது என்ன செய்யப் போகிறாய்?''

''தண்ணி காட்டப் போகிறேன் போல

சிற்கு.''

''விபரமாகச் சொல்.''

''விபரமாகச் சொல்லக் கூடாது. நா

சொல்வதை மட்டும் நீ செய். திட்டத்தை

வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நாங்கள்

வந்து சேர்ந்து விடுகிறோம்.''

''என்ன செய்ய வேண்டும்?''

''நம் திட்டத்தில் எந்த மாற்றமு

இல்லை. போய்ச் சேருகிற இடத்திலும் எந்

மாற்றமும் இல்லை. மதியம் நீ காத்திருந்

அதே இடத்தில் நீ காத்திரு.''

''எப்போதிலிருந்து காத்திருப்பது?''

''ஏழு மணியில் இருந்து காத்திரு.''

''எத்தனை மணிக்கு நீங்கள் வருவீர்கள்?

''ஏழில் இருந்து எட்டுக்குள்.''

''எப்படி வருவீர்கள்?''

''இத்தனை பேரை பணயமாக வைத்

ருக்கும் போது என்ன கவலை? அதெல்லா

நான் பார்த்துக் கொள்கிறேன். நாம் பேசி

கொண்ட அதே இடத்தில் ஏழு மணியி

இருந்து காத்திருக்க வேண்டியது உ

பொறுப்பு.''

''சரி. வேறு ஏதாவது உதவி தேவையா?

''எதுவும் தேவையில்லை. தொடர்

துண்டித்து விடு.''

தொலைபேசியை வைத்தான் கிரண்.

''கிரண், உன் திட்டம் எனக்குப் புரியவே

இல்லை'' என்றான் ராவ்.

''என்ன புரியவில்லை?''



''உதவி கமிஷனரை ஒரு காரும், வேனும் ஐந்து மணிக்கு தயார் செய்யச் சொல்லியிருக்கிறாய். அலெக்சிடம் ஏழு மணியில் இருந்து காத்திருக்கச் சொல்லியிருக்கிறாய். இங்கிருந்து நாம் எத்தனை மணிக்கு புறப்படப் போகிறோம்? யார், யாருடன் போகிறோம்? எப்படி நமது காருக்கு மாறுகிறோம்? இதெல்லாம் போலீசின் கண்காணிப்பில்லாமல் எப்படி செய்யப் போகிறோம்?''

ராவுக்கு கிரண் தனது திட்டத்தை விளக்கியதும், ஆர்வத்தில் ராவ் அவன் கையைப் பிடித்து உயர்த்தி முன்னங்கையில் முத்தம் கொடுத்தான். ''நீ இந்திய நாட்டைச் சேர்ந்த திருடனே இல்லை கிரண். எங்கோ இருக்க வேண்டியவன் நீ'' என்றான்.

''இரு. ரொம்பவும் புகழாதே. முதலில் திட்டப்படி பணத்தோடு தப்பித்துக் காட்டலாம். பாராட்டு விழா எல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம்'' என்றான் கிரண்.

அத்தனை சாமர்த்தியமாக எல்லாம் யோசித்த கிரண், ஒரு விஷயத்தை மறந்து விட்டான்.

வங்கியில் இருந்து கொண்டு வெளியே யாரை வேண்டுமானாலும் தொட்பு கொள்ள ஒரே சாதனம்- தொலைபேசி. உள்ளே கொள்ளைக்காரர்கள். எனவே இந்த மாதிரியான இக்கட்டான நேரத்தில் அந்த வங்கியின் தொலைபேசிக்கு வருகிற, அங்கிருந்து போகிற தொலைபேசி அழைப்புகளை காவல்துறை கண்காணிக்க ஏற்பாடு செய்தி

ருக்கும் என்பதை கிரண் மறந்து விட்டான்.

ஆனால்-

உதவி கமிஷனர் பாண்டியன் அந்த ஏற் பாட்டை ஏற்கனவே அந்த ஜீப்புக்குள்ளேயே செய்து வைத்திருந்ததால்...

சற்றுமுன் அலெக்சும், கிரணும் பேசிக் கொண்ட உரையாடல் அனைத்தையும் அவ ரும் மற்றவர்களும் முழுக்க கேட்டார்கள். தவிர டேப்பில் பதிவும் செய்திருந்தார்கள்.

தொலைபேசித் தொடர்பு முடிவடைந்த பிறகு நிமிர்ந்தார் பாண்டியன்.

''ஆக... இந்த கொள்ளைத் திட்டத்தில் ஈடுபட்டிருந்தது இரண்டு பேர் இல்லை. மூன்று பேர்கள். ஒரு ஆள் வெளியே இருந் திருக்கிறான். இங்கு வந்து நிலைமையைத் தெரிந்து கொண்டு அருகில் எங்கிருந்தோ தான் தொலைபேசியில் பேசியிருக்கிறான்.''

''அருள்ஜோசப்பிற்கு என்ன ஒரு தன்னம் பிக்கை பாருங்கள் சார். ஏழு மணிக்கு காத் திரு,வந்து விடுவோம் என்று உறுதியாகச் சொல்கிறானே?''

''ஆனால் காரையும், வேனையும் எதற் காக ஐந்து மணிக்கே கேட்கிறான்?''

''புரியவில்லை. சொன்ன நேரத்திற்குள் நாம் ஏற்பாடு செய்து கொடுத்து விடலாம்.''

''சார், ஒன்று நிச்சயமாகத் தெரிந்து விட் டது'' என்றார் இன்ஸ்பெக்டர் சாலமன்.

''என்ன?''

''அருள் ஜோசப் என்று அவன் தன்னை சொல்லிக் கொள்வதுகூட பொய்யான பெய ராகத்தான் இருக்கும். ஆனால் வெளியில்



இருந்து பேசியிருக்கிற அந்த மூன்றாவது ஆசாமி வெகு யதேச்சையாக தன் பெயரைச் சொல்லி விட்டான். அதனால் அவன் பெயர் அலெக்ஸ் என்பது உண்மையாகத்தான் இருக்க வேண்டும்.''

சாலமன் சொன்னதும், உதவி கமிஷனர் பாண்டியனின் மூளையில் ஒரு சின்ன பொறி பறந்தது.

''சாலமன், அவன் தன் பெயரை அலெக்ஸ் என்றுதானே சொன்னான்?''

''ஆமாம். சந்தேகமாக இருந்தால் இங்கே தானே இருக்கிறது கேசட். போடச் சொல் லட்டுமா மறுபடி? கேட்கிறீர்களா?''

''அதற்கில்லை சாலமன். சில தினங்க ளுக்கு முன்பாக ஒரு ஆசாமி என்னிடம் வந் தான். மூன்று ஆசாமிகள் ஒரு ஓட்டலில் தங்கி அவர்கள் நடத்த இருக்கும் வங்கிக் கொள்ளை பற்றிப் பேசுவதை தான் துப்ப றிந்து தெரிந்து கொண்டதாக வந்து சொன் னான். அவன் சொன்னபோது நான் கமிஷ னர் செய்யச் சொன்ன ஒரு முக்கியமான அலுவல் தொடர்பான தீவிர சிந்தனையில் இருந்தேன். தவிரவும் அவன் சொன்ன சில தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக இருந்தன. அந்தச் சமயத்தில் தான் மதுவின் போதையில் இருந்ததாகவும் சொன்னான். அதையெல்லாம் வைத்து அவன் சொன் னதை அலட்சியப்படுத்தி அவனை அவமா னப்படுத்தி அனுப்பி விட்டேன்.''

''நிஜமாகவா?''

''ஆமாம். அவன் மூன்று பேர் ஆலோசிப்

பதாக சொன்னான். வங்கிக் கொள்ளை என்று தான் சொன்னான். இந்த வங்கிக் கொள்ளையில் சம்பந்தப்பட்டிருப்பதும் மூன்று பேர்கள் என்று இப்போது தெரிய வந் திருக்கிறது."

"ஆமாம் சார்."

"இதையெல்லாம் விட, அந்த மூன்று பேரில் ஒருவன் பெயர் அலெக்ஸ். அவன் தாடி வைத்திருப்பான் என்று வேறு சொன் னான்."

சாலமன் பிரமித்துப் போனார். பரபரத்தார்.

"சார், சந்தேகமே இல்லை. உங்களைச் சந்தித்துப் பேசின ஆசாமி இந்த கொள்ளை பற்றித்தான் சொல்லியிருக்கிறான். அவன் இந்த மூன்று பேரையும் நேரில் பார்த்திருக் கிறான். அவனை அழைத்து ஆழமாக விசா ரிக்கலாம். யார் அவன்?"

"ரோஜா வார இதழில் பணியாற்றுவதா க்ச் சொன்னான். பெயர்..." நெற்றியைப் பிடித்துக் கொண்டு யோசித்தார் பாண்டி யன். "வந்து... ஆமாம். அவன் பெயர் ராஜா ராமன்" என்றார் பிரகாசமாக.



இன்ஸ்பெக்டர் சாலமன் அந்த ஜீப் பில் இருந்த தற்கா லிக தொலைபே சியை உபயோகித்து உடனே ரோஜா வார இதழின் அலுவல கத்தை தொடர்பு கொண்டார்.



"ஹலோ, அங்கே உங்கள் நிருபர் ராஜா ராமன் இருக்கிறாரா?"

"இல்லையே... வெளியில் போயிருக்கி றார்."

"நாங்கள் காவல் துறையில் இருந்து பேசு கிறோம். அவரை உடனடியாக நாங்கள் பார்த் தாக வேண்டும். அவர் இப்போது எங்கே இருப்பார் என்று விசாரித்துச் சொல்லுங்கள் தயவுசெய்து."

சில விநாடிகள் காத்திருப்புக்குப் பின்...

"அவர் சுப்ரகீத் பிரிவியூ தியேட்டருக்கு ஒரு தயாரிப்பாளரின் அழைப்பின் பேரில் விமர்சனம் எழுதுவதற்காக சினிமா பார்க்கப் போயிருக்கிறார். மூன்று மணிக்கு காட்சி. இப் போது அங்கேதான் படம் பார்த்துக் கொண் டிருப்பார்."

"சுப்ரகீத் தியேட்டர் எங்கே இருக்கிறது?"

"டி.டி.கே சாலையில், மியூசிக் அகாட மிக்கு எதிரில்."

"நன்றி" என்று வைத்த சாலமன், பாண் டியனிடம் விபரம் சொல்லி விட்டு உடனே ராஜாராமனை சந்திப்பதாக சொல்லி நடந்து சற்றுத் தள்ளி நிறுத்தியிருந்த தனது வயர் லெஸ் பொருத்தின மோட்டார் பைக்கில் ஏறிப் புறப்பட்டார்.

ஐந்தே நிமிடத்தில் சாலமன் சுப்ரகீத் தியேட்டரில் இருந்தார். அதன் மானேஜரி டம் விபரம் சொல்லவே இருவருமாக படம் காட்டும் இயந்திரம் உள்ள அறைக்கு வந்தார் கள்.

மானேஜர் உத்தரவிட, படம் காட்டுவது

நிறுத்தப்பட்டது.
ஒளி பாய்கிற சதுரம் வழியாக பெரிய குர
லில் சாலமன் கத்தினார். ''ரோஜா இதழின்
நிருபர் ராஜாராமன் மட்டும் உடனே
வெளியே அலுவலகத்திற்கு வருமாறு
கோருகிறோம். உடனே வரவும்.''
மீண்டும் படம் ஓடத் தொடங்கியது.
இருவரும் படிகள் இறங்கி அலுவலகம்
வர...
அங்கே முகத்தில் கேள்விக்குறியுடன்
ராஜாராமன் நின்றிருந்தான்.
''நீங்கள்தான் ராஜாராமனா?''
''ஆமாம்.''
''நான் இன்ஸ்பெக்டர் சாலமன். இப்படி
உட்காருங்கள். உங்கள் உதவி எங்களுக்கு
வேண்டும்.''
''உதவியா? என்னிடமிருந்தா?''
''ஆமாம். உதவி கமிஷனர் பாண்டியனை
சந்தித்து ஒரு வங்கிக் கொள்ளை நடக்கப்
போவதைப் பற்றி தெரிவித்தீர்கள் அல்
லவா?'' என்று தொடங்கி சாலமன் தற்போ
தையை நிலைமை சுருக்கமாக தெரிவித்
தார்.
''அட! அந்தக் கொள்ளை இவ்வளவ
பெரிய பரபரப்புடன் இன்றைக்கு அரங்கே
றிக் கொண்டிருக்கிறதா? அன்றைக்கு உங்
கள் உதவி கமிஷனர் என்னை கழுத்தைப்
பிடித்து வெளியில் தள்ளாத குறையாக அவ
மானப்படுத்தினார். அதற்கு மேல் யாரிடம்
போய் சொல்லி, என்ன செய்வது என்று
எனக்கும் புரியவில்லை. எனக்கும் திம



ரென்று இயக்குனர் பாக்யராஜிடமிருந்து அழைப்பு வந்து வெளியூர் சென்று விட்டு இன்றுதான் ஊருக்கே வந்தேன்.''

''அந்த விபரம் எல்லாம் வேண்டாம். வங்கியில் இப்போது என்ன நிலை என்பது உங்களுக்குப் புரிகிறதல்லவா? ஏற்கனவே ஒரு கொலை நடந்து விட்டது. வங்கிக்குள் மாட்டிக் கொண்டுள்ள நடிகை மயூரி உட்பட வங்கி ஊழியர்கள் அத்தனை பேர் உயிர்களும் அவர்கள் கையில் இருக்கிறது. துப்பாக்கி வைத்திருப்பவர்கள் சுடுவதற்கு அஞ்சாதவர்கள் என்று நிரூபித்து விட்டவர்கள். கொள்ளை அடித்து முடித்து விட்டார்கள். தப்பிக்க வேண்டியதுதான் பாக்கி. அந்த ஊழியர்களை கவசமாக வைத்துக் கொண்டு தப்பிப்பதுதான் அவர்கள் நோக்கம். இந்த நிலைமையில் அவர்களை சாமர்த்தியமாகப் பிடிப்பதற்கு நமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஒரு அருமையான தகவல் கிடைத்திருக்கிறது.''

''என்ன அது?''

''அந்த மூன்று பேரில் ஒருவன் பெயர் அலெக்ஸ். அவன் சென்னையில் ஏதோ ஒரு இடத்தில் இரவு ஏழு மணி முதல் ஒரு காருடன் காத்திருக்கப் போகிறான்.''

''அந்த அலெக்சைத்தான் நான் முதலில் மதுபானக் கடையில் பார்த்தேன். தாடி வைத்திருப்பான்.''

''அவன் எந்தக் காருடன் காத்திருக்கப் போகிறான், எங்கே காத்திருக்கப் போகிறான்? அதற்குப் பிறகு அந்தக் காரில் அவர்

கள் எங்கே செல்லப் போகிறார்கள்? இதெல்லாம் தெரிய வேண்டும். அதற்கு அன்றைக்கு நடந்ததை எல்லாம் வரிசையாகத் தொடங்கி எதையும் தவிர்க்காமல் சொல்லுங்கள் ராஜாராம். இந்த விவகாரத்தில் எந்த இடத்தில் எப்படி நீங்கள் நுழைந்தீர்கள்?''

தொண்டையை சரிசெய்து கொண்ட ராஜாராமன், ''அன்றைக்கு மாலை நான் வனிதா மதுபானக் கடைக்குப் போயிருந்தேனா'' என்று தொடங்கினான்.

மாலை மணி 5.

வங்கிக்குள் இருந்த தொலைபேசி ஒலித்தது.

கிரண் எடுத்தான்.

''ஹலோ, நான் உதவி கமிஷனர் பேசுகிறேன். நீங்கள் கேட்டுக் கொண்டபடி ஒரு காரும், ஒரு வேனும் முழுக்க பெட்ரோல் நிரப்பப்பட்டு வங்கியின் வாசலில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. காருக்குள் பெட்ரோல் நிரப்பிய கேனும் வைக்கபபட்டிருக்கிறது. மானேஜர் அறையின் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொள்ளலாம்.''

''சரி. நான் சரிபார்த்துக் கொள்கிறேன்.''

''எங்கள் கோரிக்கை என்ன ஆயிற்று?''

''பெண்களை மட்டும் விடுதலை செய்யச் சொன்ன கோரிக்கை தானே?''

''ஆமாம்.''

''என் நண்பன் நிராகரித்து விட்டான்.''

''ஊழியர்களையும் உங்களோடு அழைத்துச் செல்லப் போகிறீர்களா?''



''சற்றுப் பொறுமையாக இருங்கள், புரியும்.''

''இன்னொரு விஷயம்...''

''என்ன?''

''உள்ளே இருப்பவர்கள் எல்லாரும் காலையில் சாப்பிட்டதற்குப் பின் எதுவும் சாப்பிட்டிருக்க மாட்டார்கள். பாவம்! பசியில் துடிப்பார்கள். அவர்களுக்காக பழமும், பிரெட்டும் வாங்கி வாசலில் ஷட்டர் அருகில் வைக்கிறோம். எடுத்து உள்ளே கொடுத்து விடுங்கள். இது முழுக்க மனிதாபிமான அடிப்படையில் சொல்லப்படுவது. உங்களைப் பிடிப்பதற்கான தந்திர வேலை எதுவும் இதில் இல்லை என்பதை தயவு செய்து நம்புங்கள். ஏற்கனவே ஒரு கொலை நிகழ்ந்து விட்ட சூழ்நிலையில் நீங்கள் மீண்டும் யாரையும் சுடத் தயங்க மாட்டீர்கள் என்பதை தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறோம். உயிர்ச்சேதம் இனியும் ஏற்படாமல் உங்களோடு ஒத்துழைக்கச் சொல்லித்தான் எனக்கு மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்திருக்கிறது. அதனால்... தயவுசெய்து இந்த பிரெட் விஷயத்தில் கொஞ்சம் விட்டுக் கொடுங்கள்.''

கிரண் சற்றே யோசித்தான்.

''சரி, வாங்கி வந்து ஷட்டர் அருகில் வைத்துவிட்டு மறுபடி போன் செய்யுங்கள். நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்.''

கிரண் தொலைபேசியை வைத்தான்.

உதவி கமிஷனர் உடனே பழங்களும்,

பிரெட் பாக்கெட்டுகளும் வாங்கி வர உத்த ரவிட்டார்.

"சார், இரண்டு கூடைகள் நிறைய வைப் போம், அவற்றை எடுத்துக் கொள்ள இரண்டு பேருமே ஷட்டரின் அந்தப் பக்கம் வருவார்கள். குனியாமல் அவற்றை எடுக்க முடியாது. நாம் இயந்திரத் துப்பாக்கிகளுடன் மிகவும் அருகாமை தூரத்தில் தரையோடு தரையாகப் படுத்து தயாராக இருப்போம். அவர்கள் பழக்கூடை எடுக்க ஷட்டரை லேசாக உயர்த்திவிட்டு குனியும் போது இரண்டு பேரையும் சரமாரியாக சுட்டு வீழ்த்தி விடலாம்" என்றார் ஒரு அதிகாரி.

"தவறு. நல்ல யோசனையாக இருந்தா லும் தவறு. இரண்டு பேருமே பழம் எடுக்க வருவார்கள் என்று எதிர்பார்ப்பது முட்டாள் தனம். ஒருவன்தான் வருவான். இரண்டு பேருமே வருகிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? ஷட்டரை உயர்த்தும் முன்பாக உள்புறம் தரையோடு தரையாகப் படுத்து கால் இஞ்சிற்கு ஷட்டரை உயர்த்தி வெளிப்புறத்தைப் பார்ப்பார்கள். அப்போது நாம் இயந்திரத் துப்பாக்கிகளுடன் இருந் தால் அவர்கள் கோபமடைவார்கள். உடனே உள்ளே இருப்பவர்களை சுடத் தொடங்க லாம்."

"வேறு என்னதான் செய்யப் போகி றோம்?"

"ஒரு பிரெட் பாக்கெட்டுக்குள் அல்லது கூடைக்கு அடியில் சிறிய எலெக்ட்ரானிக்



மைக்ரபோன் வைக்க நினைத்துள்ளேன். உள்ளே அவர்கள் இருவரும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அதன் மூலம் இங் கிருந்தபடி அறிய முடியும். அதைத் தவிர இன்ஸ்பெக்டர் சாலமன் இது தொடர்பாக ராஜாராமன் என்பவரை தேடிப் போனார். அவர் நல்ல தகவலோடு வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று உதவி கமிஷனர் பாண்டியன் சொல்லிக் கொண்டிருந்த போது...

ஒரு இன்ஸ்பெக்டர் வந்து, "சார், ஜீப்பில் இருக்கும் வயர்லெஸ் கருவியில் இன்ஸ் பெக்டர் சாலமன் உங்களுடன் பேச காத்தி ருக்கிறார்" என்றார்.

பாண்டியன் ஜீப்பிற்கு விரைந்து, "பாண் டியன் பேசுகிறேன், ஓவர்" என்றார் வயர் லெஸ் சாதனம் மூலமாக.

"சார், நான் இன்ஸ்பெக்டர் சாலமன் பேச கிறேன். ராஜாராமனைப் பிடித்து விட்டேன். அவர் முழு விபரமும் சொல்லி விட்டார். அலெக்சை அவர் பார்த்தது வனிதா மதுபா னக் கடையில். அங்கே வந்த அலெக்சுக்கு கடையில் வேலை பார்க்கும் சிப்பந்தி ஒரு கடிதம் கொடுத்திருக்கிறான் புன்னகையு டன். அந்த சிப்பந்தியைப் பிடித்து நாலு தாங்கு தாங்கினால் அலெக்ஸ் பற்றி விபரம் சொல்லி விடுவான். இப்போது நானும் ராஜா ராமனும் பைக்கில் அந்த மதுபானக் கடையை நோக்கி விரைந்து கொண்டிருக்கி றோம். விரைவில் உங்களை மறுபடி இதே சாதனத்தின் மூலம் தொடர்பு கொள்கிறேன்.

ஓவர் சார்.''

உதவி கமிஷனர் பாண்டியன் சற்றே நம்பிக்கையோடு பெருமூச்சு விட்டார்.




வனிதா மதுபானக் கடை...

பைக்கை நிறுத்தி விட்டு இன்ஸ்பெக்டர் சாலமனும் ராஜாராமனும் அவசரமாக உள்ளே வந்தார்கள்.

''அந்தச் சிப்பந்தியின் பெயர் தெரியுமா ராஜாராமன்?''

''தெரியாது சார். முகம் மட்டும்தான் தெரியும்.''

''தேடிப் பாருங்கள். யார் என்று அடையாளம் காட்டுங்கள்.''

ராஜாராமன் அந்தக் கடைக்குள் ஒவ்வொரு மேஜைக்கும் மது வகைகளைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்த ஒவ்வொரு சிப்பந்தியாகப் பார்த்தான். கண்டுபிடித்து விட்டான்.

''அதோ... அங்கே பாருங்கள். ஒரு பீர் பாட்டிலை உடைத்து கண்ணாடிக் கோப்பையில் ஊற்றிக் கொண்டிருக்கிறானே... அவன்தான் அலெக்சிடம் கடிதம் கொடுத்தது.''

சாலமன் விறைப்பாக நேராக அவனிடம் சென்றார். அவன் கழுத்தில் கை வைத்தார். உந்தித் தள்ளி தனியாக ஒரு பக்கமாக கழிப்பறைகள் இருந்த பகுதிக்கு நடத்தி வந்து



விட்டார் ஒரு அறை!

அவன் கலங்கிப் போனான்.

''என்னை எதற்காக அடிக்கிறீர்கள்? நான் என்ன தப்பு செய்தேன்?''

''ஒரு பெரிய வங்கிக் கொள்ளைக்கு உடந்தையாய் இருப்பது தப்பில்லையா நண்பனே?''

''கொள்ளைக்கு உடந்தையா? நானா?''

தேதியும், நேரமும் குறிப்பிட்டு, அலெக்சை வர்ணித்து, ''அந்த அலெக்சுக்கு நீ ஒரு கடித உறை கொடுத்து பணம் வாங்கவில்லை?''

''ஆமாம். வாங்கினேன்.''

''சொல்! மரியாதையாகச் சொல். அலெக்சின் வீடு எங்கு இருக்கிறது? உன்னிடம் கடிதம் கொடுத்து அவனிடம் தரச் சொன்னது யார்? உண்மையான தகவல்களை சொல்லவில்லை என்றால் அடிக்கிற அடியில் ஒவ்வொரு எலும்பாக உடைபடுவாய்.''

''அய்யோ! எனக்கும் அவர்களுக்கும் பெரிதாக பழக்கம் எதுவும் இல்லை சார்! சில மாதங்களுக்கு முன்பாக அலெக்ஸ் எங்கள் கடைக்கு வர ஆரம்பித்தார். தினம் மாலையில் வருவார். தினம் வருவதால் அவரின் பெயரும், முகமும் எனக்கு அறிமுகமானது. அதைத் தவிர அவர் எங்கே இருக்கிறார் என்றோ, என்ன தொழில் செய்கிறார் என்றோ எனக்குத் தெரியாது. யாராவது என்னிடம் கொடுக்கச் சொல்லி இந்தக் கடைக்கு வந்து உன்னிடம் கடித உறை ஒப்படைத்தால் மாலையில் என்னிடம் அதை ஒப்படைக்க

வேண்டும். அப்படிச் செய்தால் பணம் தரு கிறோம் என்றார். ஒப்படைக்கப்படும் உறையை அவரிடம் ஒப்படைப்பேன். அவ் வளவுதான் நான் செய்வது.''

''உன்னிடம் கடித உறையைக் கொண்டு வந்து கொடுப்பது யார்?''

''இரண்டு முறையும் இரண்டு வெவ் வேறு ஆசாமிகள். அவர்களின் முகம் நினை விருக்கிறது. பெயர் தெரியாது. வருவார்கள். என்னிடம் உறை கொடுப்பார்கள். 'அலெக் சிடம் கொடுத்து விடு' என்பார்கள். அதற்கு மேல் பேச மாட்டார்கள். போய் விடுவார் கள்.''

இன்ஸ்பெக்டர் சாலமனுக்கு எரிச்சலாக வந்தது. அந்தச் சிப்பந்தியை மேலும் இரண்டு உதை கொடுத்து மிரட்டி விசாரித்த போதும் இதையேதான் சொன்னான்.

''இவன் மூலமாக அவர்களைப் பற்றி தெரிந்து கொள்வது என்பது நடக்காது.''

''சார், அன்றைக்கு அவர்கள் அறை எடுத் துத் தங்கிய ஓட்டலில் விசாரிக்கலாமா? அங்கு யாருக்காவது அவர்களைப் பற்றித் தெரியுமா என்று கேட்கலாமா?'' என்றான் ராஜாராமன்.

''கேட்கலாம். ஆனால் அது கொஞ்சம் சுற்று வழி. போதிய அவகாசம் நமக்கு இல்லை சார். வங்கிக்குள்ளே இருக்கும் இரண்டு பேரும் தப்பிப்பதற்கு முன்பாக நாம் ஏதாவது செய்தாக வேண்டும்.''

சில வினாடிகள் யோசித்த ராஜாராமன் முகம் மலர்ந்தான்.



''சார்! ஒரு யோசனை!''

''என்ன?''

''அந்த மூன்று பேரில் அலெக்ஸ் ஒரு பெண்ணைக் காதலிப்பது பற்றி அவர்கள் பேசிக் கொண்டார்கள் என்று சொன்னேன் அல்லவா?''

''ஆமாம்.''

''அந்தப் பெண்ணைக் கண்டுபிடித்து விட்டால் அவளுக்கு நிச்சயமாக அலெக்ஸ் பற்றி அதிகமான விபரங்கள் தெரிந்திருக்க வேண்டும்.''

''நல்ல யோசனை. ஆனால்... அந்தப் பெண் யார் என்றும், முகவரி எது என்றும் விபரமாக அவர்கள் பேசிக் கொண் டார்களா?''

''அப்படி பேசிக் கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் பேசிக் கொண்டதில் இருந்து அவளைக் கண்டுபிடிக்க வாய்ப்பி ருக்கிறது சார்.''

''எப்படி?''

''அவள் பெயர் சிவரஞ்சனி. அதை அலெக்சே தன் வாயால் சொன்னான். ஒரு வங்கியில் வேலை பார்ப்பதாகச் சொன் னான்.''

''சுலபம்தான். இந்த இரண்டு தகவல் களை வைத்துக் கொண்டு அவளைப் பிடித்து விடலாம். ஆனால் அதற்கு நிறைய நேரமாகுமே...''

''இருங்கள் சார். அவர்களின் முதல் சந் திப்பு எப்படி நிகழ்ந்தது என்று அலெக்ஸ் விவரித்தான். ஓட்டல் திவ்யாவிற்கு ஆட்

டோவில் சென்று இறங்கினபோது சில் லறை இல்லாததால் அருகில் இருந்த வங் கியில் சில்லறை மாற்றச் சென்றபோது அவளை முதல்முறையாக சந்தித்தேன். அவள் தவறுதலாக பத்து ரூபாய் அதிகம் கொடுத்து விட்டாள் என்றான்."

"ஆக... ஓட்டல் திவ்யா அருகில் இருக் கும் ஒரு வங்கியில் கேஷியராக வேலை பார்க்கும் பெண் சிவரஞ்சனிதான் அலெக் ஸின் காதலி! புறப்படலாம் ராஜாராமன். இங் கிருந்து மூன்று நிமிட பயணத்தில் இருக்கி றது ஓட்டல் திவ்யா."

இன்ஸ்பெக்டர் சாலமனும், ராஜாராமனும் மதுபானக் கடையை விட்டு வெளியே வந்து பைக்கில் புறப்பட்டார்கள். சாலமன் பைக் கில் பொருத்தப்பட்டிருக்கு வயர்லஸ் சாத னம் மூலமாக உதவி கமிஷனர் பாண்டிய னைத் தொடர்பு கொண்டார்.

தங்கள் அடுத்த முயற்சி பற்றிச் சொன் னார். அவ்விடத்தின் நிலைமை பற்றி விசா ரித்தார்.

"ஷட்டர் அருகில் இரண்டு கூடைகளில் பழங்களும், பிரெட் பாக்கெட்டுகளும் வைக் கப்பட்டுள்ளன. அந்த கூடைக்கு அடியில் ரகசியமாக ஒரு சிறிய மைக்ரோபோன் வைக் கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களுக்குள் அடுத்த நடவடிக்கைகள் குறித்து பேசினால் நல்லது. அதை நாம் கேட்டு அதற்கு தகுந்த படி நடந்து கொள்ளலாம். உங்கள் முயற்சியை தொடருங்கள் சாலமன்" என் றார் பாண்டியன்.



ஓட்டல் திவ்யா நோக்கி பைக் விரைந் தது.

"ராவ், நான் இங்கேயே தள்ளி நிற்கி றேன். நீ மட்டும் போ. இரும்பு ஷட்டரை கொஞ்சமாக உயர்த்து. பழக்கூடைகளை உள்ளே இழு. மறுபடி ஷட்டரை இழுத்து விடு"

கிரண் சொன்னபடி ராவ் செய்தான்.

இரண்டு ஆப்பிள் பழங்களையும், இரண்டு பிரெட் பாக்கெட்டுகளையும் எடுத்து தனியாக வைத்தான் கிரண். மேலும் இரண்டு செட் எடுத்தான்.

"மானேஜருக்கும், கேஷியருக்கும் நான் தருகிறேன். அறையைத் திறந்து மற்றவர்க ளுக்கு நீ அவற்றை விநியோகித்து விடு."

கிரண் பழங்களோடும், பிரெட்டோடும் மானேஜரின் தனியறைக்கு வந்தான். மானே ஜரும், கேஷியரும் கைகள் பின்புறம் வைக் கப்பட்ட நிலையில் நாற்காலிகளுடன் சேர்த்து கட்டிப் போடப்பட்டிருந்தார்கள்.

"எங்களுக்கும் இரக்கம் உண்டு. சாப்பி டுங்கள்" என்று ஒரு கையால் துப்பாக்கி பிடித்தபடி, மறு கையால் கட்டுக்களை அவிழ்த்தான் கிரண்.

இரண்டு பேரும் நடுக்கத்துடன் சாப்பிட் டார்கள். அவர்கள் தந்திரமாக செயல்பட எந்த சந்தர்ப்பமும் தராத கிரண், அவர்களை மீண்டும் கட்டிப் போட்டுவிட்டு வெளியே கூடத்திற்கு வந்து தனது ஆப்பிளை எடுத் துக் கடிக்கத் தொடங்கினான்.

பழைய புத்தகங்கள் வைக்கும் அறையை மறுபடி பூட்டிக் கொண்டு, இரண்டு காலி மூங்கில் கூடைகளுடன் திரும்பினான் ராவ்.

"ஏய்! இரு... அதென்ன?"

கூடைக்கு உள்பக்கம் கை நீட்டி கேட்டான் கிரண்.

குனிந்து பார்த்த ராவ், மூங்கில் பட்டைகள் எதிரும் புதிருமாக பின்னியதில் நடுவில் சாமர்த்தியமாக நுழைத்து வைக்கப்பட்டிருந்த சிறிய எலெக்ட்ரானிக் மைக்ரோபோன் சாதனத்தை விரல் நுழைத்து வெளியில் எடுத்தான்.

அதை வாங்கிய கிரண் அதை தன் வாயருகில் வைத்துக் கொண்டு பேசினான்.

"என்ன உதவி கமிஷனர் சார்... உங்கள் புத்தியைக் காட்டி விட்டீர்களே... கூடைக்குள் மைக் வைத்து அனுப்பியிருக்கிறீர்களே... இதற்கு தண்டனையாக ஒரு நபரை சுட்டு வெளியில் உருட்டி விடட்டுமா?"

உடனே தொலைபேசி ஒலித்தது. எடுத்தான். பாண்டியன் பேசினார்.

"அப்படி எதுவும் செய்து விடாதே! கூடைக்குள் மைக் வைத்து அனுப்பியதற்காக உன்னிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து யாரையும் சுட்டு விடாதே."

அவர் குரலில் இருந்த கெஞ்சலை ரசித்தான் கிரண். தொலைபேசியை வைத்தான். அந்த மைக்ரோபோன் சாதனத்தை ஜன்னல் வழியாக தூர வீசியெறிந்து விட்டு வந்தான். மணி பார்த்தான்.



மணி ஆறை நெருங்கிக் கொண்டிருந்தது.

"ராவ், இன்னும் அரை மணி நேரத்தில் நாம் இங்கிருந்து புறப்படப் போகிறோம். நீ உன்னுடைய கோட், டை, மோதிரங்கள் இவற்றை எல்லாம் கழற்றி விட்டு சாதாரணமாக ஒரு வங்கி ஊழியர்களில் ஒருவனைப் போன்ற தோற்றத்துக்கு மாறிவிடு" என்றான் கிரண்.

பதில் பேசாமல் ராவ் தன் கோட்டைக் கழற்றத் தொடங்கினான்.




சிவரஞ்சனி உயரமாக இருந்தாள். சேலை கட்டியிருந்தாள். கண்ணாடி போட்டிருந்தாள். தாடையில் திருஷ்டிப் பொட்டு வைத்தது போல ஒரு மச்சம் இருந்தது.

ராஜாராமனும், சாலமனும் அவளைச் சந்தித்துச் சொன்ன விபரங்களைக் கேட்டுமிருந்த அதிர்ச்சியில் இருந்தாள்.

"என் காதலர் அலெக்ஸ் ஒரு கொள்ளைக்காரரா?" என்றாள் நம்பவே முடியாமல்.

"ஆமாம், ஆமாம். அதில் சந்தேகமே இல்லை. அலெக்ஸ் ஒரு தொடர் குற்றவாளி. பலமுறை சிறை சென்று திரும்பியவன். வெளியே வந்ததும் புதுவிதமான திருட்டில் ஈடுபட்டு விடுவான். ஒவ்வொரு

முறையும் அவன் தங்கும் இடத்தை மாற்றிக் கொள்வான். இந்த முறை அவன் இந்த வங்கிக் கொள்ளையில் இரண்டு பேர்களுடன் சேர்ந்து ஈடுபட்டிருக்கிறான். வங்கிக்குள் இருக்கும் இரண்டு கூட்டாளிகளும் பணயக் கைதிகளை கவசங்களாக வைத்து இன்னும் கொஞ்ச நேரத்தில் புறப்பட்டு விடுவார்கள். இப்போது மணி ஆறு. ஏழு மணிக்கெல்லாம் அந்த இரண்டு கூட்டாளிகளும் காரோடு ஒரு குறிப்பிட்ட இடத்தில் காத்துக் கொண்டிருக்கும் அலெக்சோடு இணைந்து கொள்ளப் போகிறார்கள். நடுவில் ஒரு மணி நேரம்தான் இருக்கிறது'' என்றார் சாலமன்.

''என்ன செய்ய வேண்டும் நான்?''

''அலெக்சிடம் கார் இருக்கிறது என்பது தெரியுமா?''

''தெரியும். ஆனால் அதில் ஏறியதில்லை. பார்த்ததில்லை. வண்டி எண் தெரியாது. ஆனால் அம்பாசிடர் கார் என்று சொல்லியிருக்கிறார்.''

''சரி, அலெக்ஸ் தங்குமிடம் எது?''

''நான் இதுவரை சென்றதில்லை. திருவல்லிக்கேணியில் தீபா வீடியோ கடை மாடியில் ஒரு அறை எடுத்து தங்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.''

''அலெக்ஸ் பற்றி வேறு என்ன தெரியும்?''

சாலமன் ஐந்தே நிமிடங்களில் தன் விசாரணையை முடித்துக் கொண்டு ராஜாராமனு



டன் திருவல்லிக்கேணிக்குப் புறப்பட்டார்.

6.10க்கு திருவல்லிக்கேணி. 6.12க்கு தீபா வீடியோ கடை

6.15க்கு அலெக்ஸ் தங்கியிருக்கும் அறையின் பூட்டை உடைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தார்கள்.

6.30 மணிக்கு கிரண் ஜன்னல் திரை விலக்கி வெளியே பார்த்தான். வானம் இருண்டு போயிருந்தது. எங்கும் மின்சார விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தன. வங்கி வாசலில் போலீஸ் ஏற்பாடு செய்திருந்த வேனும், காரும் நின்றன. சற்றுத் தள்ளி கிரணும், ராவும் வந்த வாடகைக்கு எடுத்த கார் நின்றது. அங்கே ஏராளமான கார்கள் நின்றிருந்தன. ஆகவே உள்ளே இருக்கும் இவர்கள் அதில் ஒரு காரில் வந்திருப்பார்கள் என்று போலீஸ் யூகிக்கவே இல்லை.

கிரண் சிரித்துக் கொண்டான். ராவைப் பார்த்தான்.

அவன் இப்போது சாதாரண வங்கி ஊழியன் போல இருந்தான். ஆடம்பர ஒப்பனைகளும், அலங்காரங்களும் கலைக்கப்பட்டிருந்தன.

''ராவ், நாம் புறப்படும் நேரம் இது. போ! போய் உன் அறையில் இருக்கும் அத்தனை பேரில் அந்த நடிகை மயூரியை மட்டும் அழைத்து வா!''

சொன்னபடி மயூரியை மட்டும் வெளியே அழைத்து மறுபடி அறையைப்

பூட்டிவிட்டு வந்தான் ராவ்.

கிரண் தொலைபேசி எடுத்து வெளியே தன் ஜீப்பில் தவமிருக்கும் உதவி கமிஷனரை தொடர்பு கொண்டான். "சார், நாங்கள் புறப்படப் போகிறோம். இரண்டு விதமாக புறப்படப் போகிறோம். முதலில் நான் மட்டும் புறப்படுகிறேன். என்னோடு வங்கி ஊழியர் ஒருவரையும், நடிகை மயூரியையும் அழைத்துக் கொண்டு காரில் புறப்படுகிறேன். ஏதாவது தந்திரம் செய்தால் இருவரும் காலி. நான் புறப்பட்டு அரை மணி நேரம் கழித்து ஏதாவது ஒரு இடத்திலிருந்து போன் செய்து வங்கிக்குள் இருக்கும் இன்னொரு நண்பனுடன் பேசுவேன். அதன்பிறகு அவன் மற்ற ஊழியர்களோடு வேனில் புறப்படுவான். நான் அரை மணி நேரம் வரை பயணம் செய்யும் போது கவனிப்பேன். என் காரை உங்கள் நபர்கள் யாராவது தொடர்கிறார்களா என்று பார்ப்பேன். யாராவது தொடர்வதாக நான் உணர்ந்தால் உடனே என்னோடு இருக்கும் இரண்டு பேரில் ஒருவரைச் சுட்டு விடுவேன். நினைவிருக்கட்டும்..." வைத்தான்.

ராவ் கை கொடுத்தான் கிரணுக்கு. "இப்போது புரிகிறது உன் திட்டம். வங்கிக்குள் இன்னொரு நபர் இருக்கிறான் என்று அவர்கள் எல்லோரும் இங்கேயே காத்துக் கொண்டிருப்பார்கள். நாம் எங்கோ போய் விடுவோம். சரி, இந்த மயூரியை என்ன செய்வது?" என்றான்.

"என்ன வேண்டுமானாலும் செய்யலாம்"



"அய்யோ!" என்றாள் மயூரி, மிகைப்படுத்தப்பட்ட தன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு.

"பயப்படாதே! விட்டு விடுவோம்" என்றான் கிரண்.

"என்ன சார் இது... இப்போது என்ன செய்யப் போகிறோம்? நம் கண்ணெதிரிலேயே அவர்கள் தப்பப் போகிறார்களே" பதைத்தார் ஒரு அதிகாரி.

சிரித்தார் பாண்டியன். "கவலைப்படாதீர்கள். அந்த வேன், கார் இரண்டிலும் இரகசியமான இடத்தில் எலெக்ட்ரானிக் சாதனம் பொருத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கார், வேன் இவை எங்கே செல்கிறது என்பதை கமிஷனர் அறையில் இருக்கும் சென்னை சாலைகள் மேப்பில் மற்றொரு சாதனம் மூலம் சுட்டிக் காட்டும். நகர் முழுக்க அங்கங்கே சாதாரண உடைகளில் நபர்களை வாகனங்களுடன் நிறுத்தி இருக்கிறேன். வேறு ஒரு கோணத்துடன் சென்றிருக்கும் இன்ஸ்பெக்டர் சாலமனிடமிருந்தும் ஏதாவது நம்பிக்கையூட்டும் தகவல் வரலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் உதவி கமிஷனர் பாண்டியன்.

"அதோ... அதோ..." என்றார் அதிகாரி.

வங்கியின் முன்புற ஷட்டர் பாதி உயரம் உயர்ந்தது. கிறிஸ்தவ பாதிரியார் உடையில் இருந்த கிரண் கையில் துப்பாக்கியுடன் வெளியே வர, தொடர்ந்து நடிகை மயூரி மற்றும் சாதாரண உடையில் இருந்த ராவ்

வெளியே வந்தார்கள். ராவ் பயப்படுவது போல நடித்தான்.

இரண்டு பேரையும் துப்பாக்கி முனையில் நடத்தினான் கிரண்.

அவர்கள் மூவரும் தான் ஏற்பாடு செய்திருக்கும் காரில் ஏறப் போகிறார்கள் என்று பாண்டியன் எதிர்பார்த்துக் கொண்டிருக்க...

மூவரும் கிரண் ஏற்பாடு செய்து வந்த காரை நோக்கிச் சென்றார்கள். ஏறிக் கொண்டார்கள். நடிகை மயூரி காரை ஓட்ட, பின் இருக்கைகளில் ராவும், கிரணும் அமர... கார் புறப்பட்டது.

மயூரியின் பின்கழுத்தில் துப்பாக்கியின் முனையை வைத்த கிரண், "நான் சொல்லுகிற சாலையில் எல்லாம் சமர்த்தாக ஓட்ட வேண்டும். புரிகிறதா?" என்றான்.

கார் சீறிப் புறப்பட்டுச் சென்றதும் உதவி கமிஷனரின் முகத்தில் அசடு வழிந்தது.

"அந்தக் கார் அவர்கள் வந்த கார் என்று நாம் எதிர்பார்க்கவே இல்லை" என்றார் நொந்துபோன குரலில்.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு கிரண் மயூரியை இஷ்டத்திற்கு கண்ட கண்ட சாலைகளில் எல்லாம் ஓட்டச் சொன்னான்.

காரில் இருந்தபடியே தன் பாதிரியார் வேடத்தைக் கலைத்துக் கொண்டான். ஒரு இருட்டுச் சந்தில் திடீரென்று காரை நிறுத்தச் சொன்னான். கொள்ளையடித்த பணம் இருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு இறங்கினான். ராவையும் இறங்கச் சொன்



னான்.

மயூரியின் கன்னத்தில் தட்டினான். "நன்றி பெண்ணே!"

இரண்டு பேரும் இருட்டில் நடந்து முக்கியச் சாலைக்கு வந்து ஒரு ஆட்டோ பிடித்தபோது மணி 7.30

"கத்திப்பாரா சந்திப்புக்குப் போ!"

ஆட்டோ விரைந்து வந்து சேர்ந்தது.

அலெக்ஸ் குறிப்பிட்ட இடத்தில் தன் காருடன் காத்திருப்பதை தூரத்தில் இருந்தே கவனித்தார்கள். அலெக்ஸ் ஓட்டுனர் இருக்கையில் தயாராக அமர்ந்திருந்தான்.

ஆட்டோவை சற்று முன்பாகவே நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்ட கிரணும், ராவும் துப்பாக்கிகளை பேண்ட் பாக்கெட்டுகளில் வைத்திருந்தார்கள்.

ஓட்ட நடையில் காரை நெருங்கினார்கள். காரின் பின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே ஏற முயன்றபோது...

காரின் உள்ளிருந்து இன்ஸ்பெக்டர் சாலமன் மற்றும் இரண்டு அதிகாரிகள் நிமிர்த்திய துப்பாக்கிகளுடன் வெளியே வந்து, "கொஞ்சம் கையைத் தூக்குகிறீர்களா தம்பிகளா?" என்றார்கள். திகைத்து நின்றான் கிரண்.

போலீஸ் லாக்கப்பில் சொன்னான் கிரண். "அலெக்ஸ், இதற்காகத்தான் சொன்னேன்- நமக்கு காதல் தேவையில்லாத ஒன்று என்று. பார்த்தாயா... உன் காதலி மூலம் உன் அறை விலாசம் தெரிந்து அங்கே போயிருக்கிறார்கள். அங்கே போலி கார்

என் தகடு உருவாக்குவதற்காக நீ அட்டையில் ஸ்டென்சில் முறையில் எண்களை வெட்டி வைத்திருக்கலாமா? அதை நீ அழித்திருக்க வேண்டாமா? அந்த அட்டை மூலம் நீ காத்திருக்கும் கார் எண்ணைத் தெரிந்து கொண்டு, உடனே போக்குவரத்து போலீசிடம் சொல்லி.. உன் காரை கண்டு பிடித்து, உன்னை மடக்கி... இறுதியில் எங்களையும் மடக்கி விட்டார்கள். பார்! எவ்வளவு யோசித்து, சாமர்த்தியமாக ஒவ்வொரு காயையும் நகர்த்தினேன். இறுதியில் தோற்று விட்டோம்.''

''இனிமேல் காதல் என்று நீ ஆரம்பித்தால் செருப்படிதான்'' என்றான் ராவ்.

மறுநாள் செய்தித்தாளில் வங்கிக் கொள்ளையர்கள் பிடிக்கப்பட்டு பணம் மீட்கப்பட்ட செய்தி வெளியிடப்பட்டதோடு... ராஜாராமன் புகைப்படத்தை வெளியிட்டு 'இந்த பெரிய வங்கிக் கொள்ளையை தவிர்த்து அவர்களை பிடிக்க மிகமிக உறுதுணையாக இருந்த பத்திரிகையாளர் ராஜாராமனை காவல் துறை பாராட்டுகிறது. விரைவில் அவருக்கு அரசு கவுரவம் செய்யும்' என்று எழுதியிருந்தார்கள். அந்த செய்தித்தாளில் இருபது பிரதிகள் வாங்கிக் கொண்டு, தன் காலரை நிமிர்த்திக் கொண்டு தன் அலுவலகம் சென்றான் ராஜாராமன்.

(முற்றும்)



# வரிக்கு வரி சிரி



''மன்னா... தங்களைப் புகழ்ந்து பாடவா?''

''வேண்டாம். எழுதிய பாட்டைக் கொடும். நானே படித்துக் கொள்கிறேன். உமது கர்ணகொடூரக் குரலைக் கேட்க நான் தயாராய் இல்லை...''

-C.P.செந்தில்குமார், சென்னிமலை.

''எதிரி தனக்கு செருப்பு அனுப்பியதைக் கூட மன்னர் கௌரவமா சொல்றாரு, எப்படி?''

''தன் 'காலுக்கு மரியாதை' கொடுத்து அனுப்பியிருப்பதாகச் சொல்றாரே...''

-'திருமயம்' பெ.பாண்டியன்.

